போன் நெ. 15. விலை 2 அணு. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 14—3—54 | இதழ் 37

நச்சுப் பூச்சிகளாம், நாம்!

நாட்டை ஆளும் 'நல்லவர்' நவில்கிருர்

'வடக்கு-தெற்கு'

ஆச்சாரியார் தரும் விளக்கம்

[அடிகள்]

★

நீண்டகாலமாகப் பலவித தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகிக் காங்கிரசுக்காரர்கள் கண்டுபிடித்த மூலிகையை இப்பொழுது கசக்கிச் சாறுக்கி, வற்றக்காய்ச்சி எடுக்கப்பட்ட எசென்ஸ் இருக்கிறதே, அது இப்பொழுது, காங்கிரசுக்கு ஏற்படும் நோயைத் தீர்க்கவல்ல நல்ல மருத்துவர்யாரென்று கண்டுபிடிக்கப்பட்டவர் இருக்கிருரே, அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரசுக்கு எங்கெங்கு, எவ்வெப்போது நோய் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம், அவ்வப்போது சென்று அந்த எசென்சில் ஒரு 'ட்ராப்' கொடுத்து, நோயைக் குணப்படுத்தும் பணியில் இறங்கியிருக்கிருர்.

செங்கற்பட்டு ஜில்லாக் காங்கிரசுக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த எண்ணிய அம் மாவட்டக் காங்கிரஸ் பாதுகாவலர்கள், காஞ்சிபுரத்தை அடுத்த உத்தரமேரூர் என்ற ஊரில் ஒரு மருத்துவ விடுதியை அமைத்து, அதில், அந்த நோயாளியான காங்கிரசைப் படுக்க வைத்து, மருத்துவரை அழைத்தார்கள். அதற்கு உடன்பட்ட அந்த மருத்துவர் 7—3—54-ல் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து நோயாளியைப் பார்வையிட்டு, மேற்படி எசென்சில் ஒரு துளியைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இனி அந்த மருந்து வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டால், நோய் விரைவில் குணமாகிவிடுமென்ற நம்பிக்கை, மருந்து கொடுத்தவருக்கும், நோயாளிக்கும், நோயாளியின் பாதுகாவலர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். நோய் குணப்பட்டு, மனுஷன் நன்ருக வாழவேண்டுமென்ற நல்லெண்ணம் அவர்களுக்குமட்டுமல்ல, நமக்கும்தான் ஏற்படும் மனிதப் பண்புள்ள எவருக்குமே நோயாளி படுக்கையில் இருக்கக் கூடாதென்ற சிறந்த எண்ணம் ஏற்படத்தான் செய்யும்.

"செட்டிமிடுக்கா, சரக்கு மிடுக்கா?" என்பதுபோல், மருந்தா அல்லது அதனைப் பக்குவமாக நோய் அறிந்து கொடுக்கும் மருத்துவரின் திறமையா அந்த நோயைக் குணப்படுத்துகிறது? எவ்வளவு சிறந்த மருந்தாக இருந்தபோதிலும் அதனைப் பக்குவமாகக் கையாளத் தெரிந்த ஒரு டாக்டரால்தான் அந்த நோயைத் தீர்க்கமுடிகிறது—முடியும்.

காங்கிரசுக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த எண்ணிய அதன் காப்பாளர்கள், தங்கள் பகுதியில் இருக்கும் எந்த மருத்துவர்களாலும் அந்த மருந்தைக் கையாள முடியாதென்பதை அறிந்ததும், மாஜி மருத்துவராய் இருந்தாலும் (டாக்டர் குருசாமி அவர்களைப் போல்) நோய் அறிந்து மருந்து கொடுக்க வல்லவர் "இவர்தான்" என்ற முடிவுக்குவந்து, அவரிடம் அந்த மருந்தை ஒப்படைத்திருக்கிருர்கள். அவரும் அந்தப் பணியை ஏற்று மருந்தும் கையுமாக மாநிலமெங்கும் சுற்றி வருகிருர். மருத்துவர் மகா திறமைசாலி என்ற நம்

பிக்கையோடு அவர்களும் அவருக்கு உற்சாக மூட்டியவண்ணம் இருக்கின்றனர்.

முன்பெல்லாம் காங்கிரஸ் என்ற அந்தத் திடகாத்திரசாலியை ஒரு வகை எறும்பு கடித்திருக்கிறதென்று இந்த மருத்துவரால் கண்டுபிடிக்கப்பட்டு மருந்துகொடுக்கப்பட்டது. பின்னர் மூட்டைப்பூச்சி கடிக்கிறதென்று மருந்துகொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது ஒரு புது வகையான பூச்சி விழுந்து காங்கிரஸ் என்ற பயிரை அழிக்க ஆரம்பித்துவிட்டதென்று கூறி அந்த மருந்தைக் கொடுத்து வருகிறார்.

மருந்து எப்படிப்பட்டது? அந்த மருந்தைக் கையாளும் மருத்துவர் யார்? தெரிந்துகொள்ளவேண்டுமா?

மருந்து எந்தப் பச்சிலைகொண்டு பக்குவப்படுத்தப்பட்டதென்பது சரியாகத் தெரியாவிட்டாலும், அந்த மருந்துப் புட்டியின்மீது ஒரு லேபில் ஒட்டப்பட்டிருக்கிறது, அதில்,

"இவன் வடக்கத்தியான் — தெற்கத்தியானை ஆள்கிறான் — இவன் பரம விரோதி–சுரண்டுகிறான்–வெறுப்பையும் பகைமையையும் உண்டாக்கிச் சுதந்திரக் கூடத்தை உடைக்க ஏற்பாடு செய்கிறார்கள்"

என்று எழுதப்பட்டிருப்பதோடு,

"காங்கிரசின் ஒற்றுமையைக் குலைத்து அதன் திடகாத்திரம் அழிக்கப்படுவதை இந்த மருந்து தடுத்துவிடும்."

என்ற குறிப்பும் (Foot note) தரப்பட்டிருக்கிறது. மருந்தைக் கையாள்பவர்கள் அவ்வப்போது மாறுவதுபோலவே, மருந்துப்புட்டி மீது ஒட்டப்படும் லேபிலும் அதனைக் கையாள்பவர்களால் மாற்றப்பட்டுவிடுகிறது.

"பார்ப்பனர்—அல்லாதார்!
ஆரியர்—திராவிடர்!"

என்று எழுதப்பட்ட லேபில்கள் ஒவ்வொரு சமயம் இந்த மருந்துப் புட்டிமீதே ஒட்டப்படுவதுமுண்டு.

இப்படிப்பட்ட "காங்கிரஸ் சர்வரோக நிவாரணி"யான இந்தமருந்து இப்பொழுது இம்மாநில அமைச்சராம் ஆச்சாரியார் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இந்தப் 'பூச்சி நோய்' எங்கெங்கு பரவுகிறதோ, அங்கெல்லாம் இந்த மருத்துவர் அழைக்கப்பட்டோ அல்லது தாமாகவோ சென்று நோயின் தன்மையை விளக்கி அந்த மருந்தைக்கொடுத்து வருகிறார்.

அண்மையில், காஞ்சிபுரத்தை அடுத்த உத்தரமேரூரில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கும் நோயாளிக்கு மருந்தளிக்க அழைக்கப்பட்ட ஆச்சாரியார்,

'உங்கள் மாவட்டத்தில் நல்ல மழை பெய்தது. நல்ல விதைபோட்டீர்கள். தண்ணீர் வசதி இருந்தது. அரசாங்கத்தை யோக்கியமாக நடத்தக் காங்கிரஸ் ஆட்சி வருமா என்று நினைத்தீர்கள். அந்தக் காங்கிரஸ் ஆட்சியை நல்ல அனுபவமுள்ளவனும் கிழவனுமான என்னைப் பிடித்து அமைக்கச் சொன்னீர்கள். ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது உங்கள் பயிர்கள் என்ன ஆயிற்று? ஒரு பூச்சி கிளம்பிப் பயிர்களை எல்லாம் அழித்துவிட்டது."

என்று பேசியிருக்கிறார். மழை பெய்ததால் தண்ணீர் வசதி பெருமளவில் கிடைத்து, நல்ல விதையாகப் பார்த்துப் பயிரிட்டும், நல்ல அனுபவமும் கிழமுமான ஒரு 'நல்லவர்' ஆட்சிப் பொறுப்பை ஏற்றும் பயிர்களை பூச்சிகள் அரித்துவிட்டதே! ஏன் என்று நோயறிந்து மருந்து கொடுக்க வல்லவராம் அந்த மருத்துவர் கேட்கிறார். நாம்கேட்க வேண்டிய கேள்வியை அவர் கேட்கிறாரே! அதனைக் கேட்டுக்கொண்டிருப்போர் மதி எங்கே போயிற்று? நல்ல வயல்! நல்ல விதை! நல்ல மழை! இவற்றிற்கு மேலாக நல்ல ஆட்சி!! இருந்தும்.........! பயிரை என்னவோ பூச்சி அழித்தே விட்டது. நல்ல ஆட்சியில் நாசம் விளைவிக்கும் பூச்சி எப்படி வந்தது—வர முடிந்தது? இந்தப் பூச்சியின் உற்பத்திக்குக் காரணம் என்ன? மழையா? விதையா? நல்லாட்சியா?

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டால், பரமசிவனும் பார்வதியும் அர்த்தநாரீஸ்வரராக மாறியது போல், பாலாற்றின் ஒருபாதியிலே பாலும், மறுபாதியிலே தேனும்ஓடும் என்று அந்தக்காலத்தில் எக்காளமிட்டார்களே! இப்பொழுது காங்கிரஸ் ஆட்சி, அதிலும் அனுபவமுள்ள நல்லவரால் ஆளப்படும்நல்லாட்சியில் பாலும் தேனும் ஏன் ஓடவில்லை என்று எங்களுக்கிருக்கும் இயல்பானபெருந்தன்மையால் கேட்காமல் இருக்கிறோமென்றாலும், நல்லவர் ஆட்சியில் நாசகாரப்பூச்சிகள் ஏன்—எப்படி உண்டாயிற்று என்பதைக் கூடவா கேட்காமல் இருக்கமுடியும்? இதனை அந்தமருத்துவரின் கையாட்கள் கருத்திலிருத்திப் பார்க்கவேண்டாமா? ஆளத்தெரியாத அனுப

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.
தீட்டிய

பொன்னொளி

விலை அணா 4.

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால் தில்லைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

'பவழ பஸ்பம்' தயாராகிறது!

பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

தேயங்கள் ஆட்சியில் இருப்பதால் தான் இந்தத் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது என்று நாம் கூறவில்லை— கூறுவது அவ்வளவு நன்றாக இருக்காது. அதோ அந்தக் கூடாரத்துக்குள்ளேயே, ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றிக் கும்பல் கும்பலாகக் கூடிப் கூடிப் பேசுகிறார்கள்—அவர்களிடம் போய்க்கேளுங்கள்—அந்த விபரத்தை அவர்களேகூறுவார்கள். நாம் கூறினால், இதுவும், அந்த மருந்துப்புட்டிக்குலேபிளாகப்பயன்பட்டு விடும். எனவே அவர்களிடமே அந்த உண்மையைக்கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் நல்லது — அறிவுடைமையுமாகும்.

நல்லவர் ஆட்சிக்குவந்தார்—நல்ல பஜனை நடைபெற்றது—நல்ல மழை பெய்தது—நல்லவிதை போடப்பட்டது. என்றபோதிலும் பூச்சிபயிரை அழித்துவிட்டது. இதுபற்றியகவலை அந்த நல்லவருக்குத் துளியும்இல்லையாம்! நாட்டுமக்களின் உயிர் நாடியான நெற்பயிர்களைப் பூச்சி அழித்துவிட்டதுபற்றிய கவலை அந்த அனுபவமிக்க நல்லவருக்கு இல்லையாம்! "நாட்டைக் காங்கிரஸ்தான் ஆளவேண்டுமென்று நினைத்தீர்கள்—அதன் பொறுப்பைநான்தான் ஏற்க வேண்டுமெனறும் விரும்பினீர்கள்—வயதிலும் அனுபவத்திலும் கிழப்பருவத்தை அடைந்துள்ள நானும் அந்தப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்—என்னுடைய பஜகோவிந்தப் பிரசாரத்தால் மழையும் பெய்தது—இதனைமறுக்கயாராலும் முடியாது—இவற்றின் பலன் இதோ பயிரைப் பூச்சி அழித்து விட்டது— என்றபோதிலும், எனக்கு இதைப் பற்றிச் சிறிதளவும் கவலை கிடையாது" என்று கூறுகிறார்

"உங்களுடைய வயலிலுள்ள நெற்பயிரைப் பூச்சிஅரித்து விட்டது போல் என்வயலுக்கும்பூச்சி ஏற்பட்டுப்போய் இருக்கிறது"

என்று கூறி, அது எந்த அளவுக்கு அவரைப் பாதித்திருக்கிறதென்பதையும் விளக்கியிருக்கிறார்.

"என் கவலை என் பூச்சியைப் பற்றியதாகவே இருக்கிறது"

என்று கூறுவதன் வாயிலாக நாட்டு மக்களின் நல்வாழ்வை நாசமாக்கிய அந்தப் பூச்சியைப் பற்றிய கவலை தமக்கு இல்லை என்பதை விளக்கியிருக்கிறார். மீண்டும் ஒரு முறை மேலேயுள்ள அந்த வாசகத்தைப் படித்துப் பாருங்கள். அவருடைய கவலை எதைப்பற்றியதாக இருக்கிறதென்பது எளிதில் விளங்கும். இந்தக் கவலையோடு மட்டும் அவர்நிற்கவில்லை. இன்று ஒருபடி மேலே போகிறார். இந்தப் பூச்சிக்கு என்ன மருந்து கண்டுபிடிப்பதென்பது அதைவிடக் கவலையாக இருக்கிறதாம்!

"இந்தப் பூச்சிக்கு என்ன மருந்து என்பது என்கவலை"

என்று ஏக்கத்தோடு பேசுகிறார் அந்தப் பெரியவர். அந்தப் பூச்சி அவருடைய 'வயலில்' முளைக்கும் பயிரை முளையிலேயே அடிக்கிறதாம்! நெற்பயிரை அழிக்கும் பூச்சியாவது, பயிர் வளர்ந்து கதிர்விடும் சமயமாகப் பார்த்து அழிக்கிறது! ஆனால் "எனது வயலில் விழுந்திருக்கும் பூச்சியோ என்னுடையபயிரை முளையிலேயே அழித்துவிடுகிறது" என்றுமுறையிடுகிறார். அவருடைய வயலில் வளரும் பயிர் எது தெரியுமா? அதனையும் அவரேகூறியிருக்கிறார். காங்கிரஸ்காரர்களுடைய "நல்லகுணம்" என்றபயிர்தான் அவருடைய வயலில் வளர்கிறதாம்! அதனைத்தான் அந்தப் பூச்சி அழிக்கிறதாம்! காங்கிரசின் "நல்ல குணம்" என்றபயிர் ஆச்சாரியாரின் "ஆட்சி" என்றவயலில் வளர்கிறதாம்! அதனை அந்தப்பூச்சி முளையிலேயே அழிக்கிறதாம்!

"உங்களுடைய நல்ல குணச் சத்தை இந்தப் பூச்சி அழிக்கப் பார்க்கிறது"

என்று கூறி, மற்ற ஆபத்துக்களைவிட இந்த ஆபத்து மிகப் பயங்கரமானது என்று விளக்குகிறார்.

"பல சில்லறைக் கவலைகள் கஷ்டங்கள் இருக்கலாம். அவை பெரிதல்ல, இந்த நாட்டுக்கு விரோதமானது இந்தப் பூச்சி நோய்தான்"

நாட்டிலுள்ள நெற்பயிர்களை எல்லாம் பூச்சி அழிக்கிறது—சில்லறைக் கவலை!

மக்கள் வறுமையால் வதைகிறார்கள்—சில்லறைக் கவலை!

வேலையில்லாத் திண்டாட்டம் வேதனை தருகிறது — சில்லறைக் கவலை!

கட்டத் துணியும் குந்தக் குடிசையும் இல்லை—சில்லறைக்கவலை!

அரசாங்கம் வரிமேல் வரி போடுகிறது—சில்லறைக் கவலை!

"காங்கிரசின் நல்ல குணம் அழிக்கப்படுகிறது-பெரிய கவலை"

கவலைகளுக்கெல்லாம் தலையாயகவலை இதுதானாம்!

நல்ல வயலிலே நல்ல விதை போட்டு நல்ல மழை பெய்து நல்ல ஆட்சி நடந்தும் பூச்சி பயிரை அழித்ததைவிட, நல்லவர்களாம் இந்தக் காங்கிரஸ்காரர்களின் நல்ல குணத்தை அழிப்பதுதான் மிகப் பெரிய ஆபத்தாம்! நல்லவர்களைக் கெட்டவர்கள் கெடுக்கிறார்கள் — அதிலும் பெரும்பான்மை நல்லவர்களைச் சிறுபான்மை கெட்டவர்கள் கெடுக்கிறார்கள்! எத்துணைக் கெடுதல் இது!! இதனை விட்டு வைக்கலாமா? நல்லவர்களுக்கிருக்கும்நல்ல குணத்தை இந்தக் கெட்டவர்கள் உறுஞ்சி எடுத்து விடுகிறார்களாம்! எனவே, அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமாம்! ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் அமைச்சராம் ஆச்சாரியார் கூறுகிறார் இவ்விதம்!

முச்சந்தியில் நின்றுகொண்டு முடிச்சவிழ்க்கிறானே, முனியன்! அவன் நாக்கில் நரம்பின்றி நல்லவர்களைத் திட்டுகிறான்—அது அவனுடைய இயல்பு-மன்னித்துவிடலாம் அல்லது அவன் கண்ணிற்படாமல் மறைந்துபோய் விடலாம்.

ஆனால், இந்த நல்லவர் — அனுபவசாலி—அமைச்சர் — கிழவர் இருக்கிறாரே, இவர் கூறுகிறார், நாம்

அடுத்த தி. மு. க. பொதுக் குழு

அடுத்த பொதுக்குழுவை நாஞ்சில் மாவட்டத்தில் நடத்த வேண்டுமென்ற நாஞ்சில் ஜன் அவர்களின் அழைப்பை பொதுச் செயலாளர் ஏற்றுக்கொண்டு அடுத்தகூட்டம் நாஞ்சில் மாவட்டத்தில் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.

அவர்களின் நல்ல குணத்தை எல்லாம் உறிஞ்சிஎடுக்கும் பூச்சிகளாம். எனவே எங்களை விட்டு வைக்கக் கூடாதாம்! ஒத்துக்கொள்ளுகிறோம்!! ஆனால், இப்படி எங்கள்மீது பாயும் இவர் ஒன்றை மறந்துவிட்டார் என்பதை நினைக்கும்போதுதான் அந்த முச்சந்தி முனிவனின் மூர்க்கத்தனம் நம்முடைய நினைவுக்கு வருகிறது.

நல்லவர்களுடைய நல்ல குணங்களை எல்லாம் நாம் உறிஞ்சி எடுத்துக்கொண்டால், அந்த நல்லகுணங்கள் எல்லாம் நமக்கு வந்துவிடுகின்றன என்றுதானே பொருள். "நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே" என்பது அன்றையபொன் மொழிகளில் ஒன்றன்றோ! அந்த அறிவுரையைப் பின்பற்றி நாம் பிறரிடம் காணப்படும் நல்ல குணங்களை கிரகித்துக்கொள்வது, அதாவது ஆச்சாரியாரின் பாஷையின்படி உறிஞ்சி எடுத்துக் கொள்வது எப்படி நாட்டுக்கு நாம் செய்யும்கேடாகும்?

காங்கிரஸ்காரர்களிடம் நல்ல குணம் இருக்கிறதா இல்லையா என்பது வேறு விஷயம். எனக்குத் தெரிந்தவகையில் காங்கிரசில் இருந்த நல்ல குணம் படைத்தவர்கள் பெரும்பாலும் அதிலிருந்து விலகியும்—விலக்கப்பட்டும் விட்டனர் என்பது மட்டும் மறக்கமுடியாத உண்மையாகும். என்ற போதிலும், காங்கிரஸ்காரர்களின் நல்ல குணத்தையெல்லாம் நாம் உறிஞ்சி எடுத்துக் கொள்வதாகக் குற்றஞ்சாட்டுகிறாரே ஆச்சாரியார், அவருக்குப் பதில்கூறும் முறையிலே இதனை எழுதுகிறோமே தவிர, உண்மையாகவே காங்கிரஸ்காரர்களிடமிருக்கும் நல்ல குணங்களையெல்லாம் நாம் எடுத்துக் கொள்கிறோம் என்று ஒப்புக்கொண்டு இதனை எழுதவில்லை. அவர்களிடம் ஏதாவது நல்லகுணம் இருந்தால் தானே நாம் எடுத்துக் கொள்வதற்கு!

நாட்டுக்கு அவர்கள் செய்யும் நாசத்தைமக்களுக்குவிளக்கிக்கூறும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அதே சமயத்தில், 'தப்பித் தவறி ஏதாவது நல்லகாரியம் செய்தாலும், அதை நாம் பாராட்டத் தவறுவதில்லை. அவர்கள் செய்த நல்லகாரியங்கள் எல்லாம் நாம் நீண்டகாலமாகச்செய்துவந்த காரியங்களேயாகும். தீண்டாமை ஒழிப்பு, கோயில் நுழைவு, இருதாரமணத்தடை, மதுவிலக்குப் போன்ற சில நல்லகாரியங்களை அவர்கள்செய்தார்கள்என்றால், அவை, கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளாகிச் செய்யப்பட்ட பயங்கரமானபிரசாரத்தின் பயனாகஏற்பட்ட நல்ல காரியங்களாகும். என்ற போதிலும், அதிகார பூர்வமாக அந்தக் காரியங்களை அவர்கள் செய்துவைத்ததால் அவர்களை நாம் பாராட்டுகிறோம்—அது நம்முடையபண்பின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகும். ஆனால், ஆச்சாரியின் கண்களுக்கு நாம், நச்சுப் பூச்சிகளாகத் தென்படுகிறோமாம்! நாம் நச்சுப்பூச்சிகளாகவோ அல்லது நச்சுப் பூச்சிகளின் குணம் படைத்தவர்களாகவோ இருந்திருந்தால், எவ்வளவோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன அந்தக் குணத்தை வெளிப்படுத்த! பழங்காலக் கதைகள் எதற்கு? இதோ நம்முடைய காலத்தில்—நாகரிகம் தன்னுடைய நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ள இந்தக் காலத்தில் ஏற்பட்டதேஅப்படியொருசந்தர்ப்பம்!

உலகம் போற்றும் உத்தமராம் காந்தியடிகளை, நாகரிகம் எந்த உச்சநிலையை அடைந்தபோதிலும், தம்மை அது அணுகவில்லை—அணுக முடியாது என்பதனை நிரூபிப்பதுபோல், திறந்தவெளியில் நின்றுகொண்டு துப்பாக்கியால் சுட்டுக்கொன்றானே கொடுமைக்கு உறைவிடமான பரம்பரையில் உதித்த அந்தஉலுத்தன் கோட்சே! அன்று, அந்தக் குணம் நம்மிடம் இருந்திருந்தால் நிச்சயம் வெளிப்பட்டிருக்கும். நாம் அதைச் செய்யவில்லை. மாறாக, அவ்வித நச்செண்ணம் கொள்வது நல்லதல்ல என்ற உபதேசத்தை உலகுக்கு உணர்த்த நாம்தான் முன்வந்தோம்—தேவைப்பட்டோம். என்றாலும், நாம் நச்சுப் பூச்சிகளாம்! அந்த "நல்லவர்" கூறுகிறார்! நாட்டிலே உள்ள சிலர் அதை இன்னும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஓநாய், தன்முன் நின்ற ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்பதற்காகக் கூறிய விளக்கத்துக்கும் ஆச்சாரியாரின் இந்த வாதத்துக்கும் எள்ளளவும் வித்யாசமில்லை என்பது சிந்திப்பதில் சிரத்தைகொள்ளும் எவருக்கும் புலனாகக்கூடிய ஒன்றாகும்.

*

ஆச்சாரியாரின் கையில் கொடுக்கப்பட்டிருக்கும் மருந்துப்புட்டியில் ஒட்டப்பட்டிருக்கும் லேபிலைப் பற்றி எழுத நேர்ந்ததால், அதன் முழு விளக்கத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஆச்சாரியாரின் ஆருடப்படி நாம் வடக்கத்தியான்—தெற்கத்தியான் என்று பிரித்துப் பேசுபவர்கள்; வடக்கத்தியான் தெற்கத்தியானை அடக்கி ஆள்கிறான் என்று அகம்பாவமாகப் பேசுபவர்கள்; ஒருவர்மீது ஒருவர் வெறுப்பும், பகையையும் உண்டாக்குபவர்கள்; வடக்கத்தியான் தெற்கத்தியானைச் சுரண்டுகிறான் என்று சொல்பவர்கள் — ஒப்புக்கொள்கிறோம்—இதனை. நாம் இன்றோ நேற்றோ கூறவில்லை. வடக்கு, தெற்கை அடக்கி ஆள ஆரம்பித்த காலத்திலிருந்தே ஒளிவு மறைவின்றிக் கூறிவருகிறோம். அதற்காகவே நாம் இயக்கத்தை—கட்சியை ஆரம்பித்து நடத்திவருகிறோம்.

வடக்கு, தெற்கை ஆளும் அக்ரமம் ஒழியவேண்டுமென்பதுதான் நம்முடைய குறிக்கோள் – இலட்சியம். இதனை, ஆச்சாரியாரோ மற்றவர்களோ சொல்லித்தான் மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதில்லை. நம்முடைய எண்ணம்—எழுத்து–பேச்சு–அவ்வளவும் இந்த ஒரு காரியத்துக்கே அரசியல் துறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதென்பது உலகறிந்த இரகசியம்.

இன்று நேற்று முளைத்த புதுசுகளுக்கு ஒரு வேளை நாம் யார்? நம்முடைய இலட்சியம் எது? எதற்காகப் போராடுகிறோம் என்பது தெரியாமல் இருக்கலாம் அல்லது தெரிவிக்கப்படாமல் இருக்கலாம் அல்லது தெரிவித்தால் தங்கள் பலம் எங்கே குறைந்து விடுமோ என்ற பயத்தால் அந்தக் காரியத்தைச் செய்யாமல் இருக்கலாம். ஆனால், ஆச்சாரியார்போன்ற 'அந்தக்கால மனிதர்'களுக்கு, நாம் யார்–நம்முடைய போராட்டம் எதனை அடிப்படையாகக்கொண்டது என்பது நன்றாகத் தெரியும். தெரிந்தும்

கூறுகிறார், நாம் நாட்டைப்பிரிக்கும் 'நாச' வேலையைச் செய்கிறோமாம்! ஒற்றுமையைக் குலைக்கிறோமாம்! சிரமப்பட்டுப் பெற்ற சுதந்திரக் குடத்தை உடைக்க ஏற்பாடு செய்கிறோமாம்!

சுதந்திரம் என்ற சொல்லின் பொருள் அறியாத இவர்களிடம், சுதந்திரம் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு இருக்கிறதே, அது சொல்லுந்தரமன்று. சுதந்திரம் யாருக்கு? இந்த நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஒரு சிலருக்குமட்டுமா? அல்லது இந்த உபகண்டத்தில் வாழும் அனைவருக்குமா என்பதனைக்கூடச் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்கு, அதிகார ஆசை என்னும் மூடுபனி அவர்களை மறைத்துக்கொண்டிருக்கிறது. வெள்ளைக்காரனால் ஆளமுடிந்த இந்த நாட்டைத் தம்மால் ஆளமுடியாதா என்ற நப்பாசை, இவர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. வெள்ளையன் இங்கு வருவதற்குமுன் இந்த உபகண்டம் எந்த அமைப்போடு இருந்தது, அவன் போனபின் எந்த அமைப்போடு இருக்கவேண்டும் என்ற சரித்திர நோக்குக்கூட இவர்களுக்கு ஏற்படவில்லை. வெள்ளையன் இங்கு வருவதற்குமுன் இந்நாட்டு மக்கள் எந்தவிதமான சுதந்திரத்தோடு இருந்தனர் என்ற அந்தக் கால நிலையை நினைத்துப் பார்ப்பார்களானால், இப்போதைய சுதந்திர அமைப்புச் சுத்த மோசமானது—சுயநலமென்ற அடிப்படையைக் கொண்டது — திருடனிடமிருந்து மீட்கப்பட்ட பொருளை அதற்குடையவர்களிடம் ஒப்படைக்காமல் வைத்திருப்பது மாபெரும் தவறு என்பதை உணர்வார்கள். ஆனால், கிடைத்த பொருள் யாருடையதாக இருந்தபோதிலும், திருடனை மடக்கி அவனோடு போராடி, அந்தப் பொருளைமீட்டது நாம்தானே, எனவே, நமக்குத்தானே சொந்தம் என்று கூறுவதுபோன்ற குறைமதி படைத்தோரை, இங்கன்றி வேறு எங்கேனும் காணமுடியாது. திருடனோடு போராடியதால் ஏற்பட்ட கஷ்டத்திற்கு ஏதாவது சன்மானம் வேண்டுமானால், கேட்டுப் பெற்றுக்கொள்ளலாமே தவிர, மீட்கப்பட்ட பொருள் 'என்னுடையதுதான்' என்று ஏமாற்றும் எத்தனுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்? முதலில், நம்முடைய பொருளைத் திருடினானே அவன், இல்லாததால் திருடினான் அல்லது கொள்ளையடிக்கும் எண்ணத்துடனேயே திருடினான் என்பது ஒருபுறமிருக்கட்டும். திருட்டுப்போன பொருளை மீட்டார்களே, இவர்களை என்னவென்று அழைப்பது? இல்லாதவர்களா? கொள்ளையடிப்பவர்களா? அல்லது குள்ளநரிக் குணம் படைத்த நயவஞ்சகர்களா? உறவாடிக் கெடுக்கும் உலுத்தர்களா? ஆசியாவிலிருந்து அகில உலகம்வரை அறிவொளியைப் பரப்புவதாகச் சொல்லப்படும் இவர்கள், இந்தச் சாதாரணவிஷயத்தைக் கூடப் புரிந்துகொள்ளவில்லையென்றால், அதன் பொருள் என்ன? விஷயத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்பதல்ல, அதனை மூடிவைக்கப் பார்க்கிறார்கள் என்பதுதான்.

*

கொள்ளையடிப்பவனோடு கூடி வாழ்வதைவிடக், கள்ள எண்ணம் படைத்த கயவர்களோடு சேர்ந்து வாழ்வது பரிகாரம் காணமுடியாத ஆபத்தாகும். கொள்ளையடிப்பவனுக்காவது சிற்சில சமயங்களில் வெள்ளை உள்ளம் ஏற்படுவதுண்டு. ஆனால் இந்தக் கள்ள உள்ளம் படைத்தவனிடம் மட்டும் கண்ணியத்தை எதிர்பார்க்கவே முடியாது.

*

“திருடனிடமிருந்து மீட்கப்பட்ட பொருள் இருக்கிறதே, அது, எந்தத் தனிப்பட்டவர்களுக்கும் சொந்தமானதல்ல, நாட்டின் பொதுச் சொத்து, எனவே அதை யாரிடமும் கொடுக்கமுடியாது” என்ற வாதம் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடாது. சொத்து ஒரு வேளை பொதுவானதாக இருக்கலாம்—பொதுவானதாக ஆக்கப்பட்டிருக்கலாம்—ஒத்துக்கொள்கிறோம் பாகப் பிரிவினை வரும்போது—நிச்சயம் வரும் — இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது வந்துதானே தீரும்—அப்பொழுது அவரவர்களுடைய விகிதாசாரப்படி பிரித்துக்கொடுக்க வேண்டியதுதானே! இதனை எந்த அறிவுச்சூனியனும் மறுக்கமாட்டானே! ஆனாலும் மறுக்கிறார்கள்!

சொத்துப் பொதுவாக இருக்கும் வரையில் தங்களுக்கு இலாபம் என்று யார் நினைக்கிறார்களோ, அவர்கள் மறுக்கிறார்கள்!

பாகப்பிரிவினை ஏற்பட்டால் ஒரு வேளை தங்களுடைய நிலைமை பரிதாபத்துக்குரியதாகிவிட்டால் என்ன செய்வதென்று தவறாக எண்ணுபவர்கள் மறுக்கிறார்கள்.

பாகப்பிரிவினை ஏற்பட்டால், தங்களை இன்னார் என்று உலகுக்கு அறிவிக்கும் விளம்பர இலாக்கா மூடப்பட்டுவிடுமே என்று அஞ்சுபவர்கள் மறுக்கிறார்கள்!

பொதுச் சொத்தின் பொறுப்பாளியாக இருப்பவனுக்குப் பக்கத்தில் இருந்து பவனிவர விரும்புபவர்கள் இந்தப் பாகப் பிரிவினையை மறுக்கிறார்கள்!

குடும்பம் குதூகலமாக இருப்பதைப் பார்க்கச் சகியாதவர்கள் இந்தப் பாகப்பிரிவினையை மறுக்கிறார்கள்!

குடும்பத்துக்குள்ளே சதா சண்டையும் சச்சரவும் நடந்துகொண்டிருக்கவேண்டுமென்று நினைப்பவர்

(10-ம் பக்கம் பார்க்க)

சென்னை ஏஜண்டு

சென்னை நகருக்கு K. T. சம்பந்தம் அண்டு கோ. என்ற விலாசத்தாருக்கு 'திராவிட நாடு' விற்பனை உரிமை தரப்பட்டுள்ளது. முன்னாள் 'திராவிடநாடு' விற்பனையாளராக இருந்து பணியாற்றிய தோழர் G. N. சாமியே மீண்டும், அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்த முன்வந்திருக்கிறார் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். மார்ச்சு முதல் வாரத்திலிருந்து, பிரதிகள் தேவைப்படுவோர் K. T. சம்பந்தம் அண்டு கோ, 183. பவுண்ட்ரோடு, சென்னை 2. என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி.

நாற்றமடிக்கிறது!

மதுபானம் அருந்துவதால், மக்களின் மதி மந்தமாகிறது—குடும்பம் கொந்தளிப்பால் அல்லல்படுகிறது—கூடாத எண்ணங்களும், கொடூரச் செயல்களும் கோலோச்சுகின்றன என்ற காரணத்தாலேயே, காங்கிரசார், மதுவிலக்கை முக்கிய திட்டமாகக் கொண்டு, சட்டம் செய்து, அதை நடைமுறையில் கொண்டுவர, மதுவிலக்கு இலாகா ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

என்றபோதிலும், மதுபானம் அருந்துவோரின் தொகை குறைந்ததாகக் காணவில்லை. பதிலாக, வீதிக்கு வீதி கள்ளச் சாராயம் காய்ச்சுவோரும், அதை அருந்துவோரின் தொகையும் அதிகரித்துள்ளன என்பதை, கள்ளச் சாராயம் காய்ச்சினோரும், அதை அருந்தினோரும் சிறைச்சாலையில் நிரம்பியிருக்கின்றனர் என்ற விவரம் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

மதுவிலக்கு, மக்கள் மத்தியில் வெற்றிபெறாதது குறித்து நாம் வேதனைப்பட்டபோதிலும், மக்கள் சர்க்காரிலே மந்திரிகளாக வீற்றிருப்போரின் மத்தியிலேயும் அது வெற்றி பெறாதது குறித்து, நாம் மிக மிக வேதனைப்படுகிறோம்—வெட்கப்படுகிறோம்.

மதுவிலக்கு, சட்டசபை மெம்பர்களிடையேயும், மந்திரிகளிடையேயும் வெற்றிபெறாதது மட்டுமல்ல; மதுவிலக்கைச் சட்டமாகக்கொண்டு வருவதற்கு முன்பிருந்ததைவிட—ஆங்கிலேயர் இங்கு ஆட்சிபுரிந்தபோது இருந்ததைவிட—அதிகமான அளவில் நடைபெறுகிறதென்பதை அறியும்பொழுது, வேதனையின் கடைசி எல்லையிலே நாம் கொண்டுபோய் நிறுத்தப்படுகிறோம்.

ஆட்சிப்பீடமேறியோர், அவர்கள் செய்த சட்டத்தைத் துச்சமென மதித்து, அலங்கோலமாக நடப்பது அடுக்குமா என்று, நம்போன்றோர் கேட்டால், 'குற்றங் கூறித் திரியும் குதர்க்கவாதிகள்' என்று சீறி விழும் காங்கிரஸ் கண்ணியவான்கள், இந்திய நாட்டின் மூடி சூடா மன்னரெனப் போற்றப்படும் நேருவே இடித்துக் கூறுவதைக் கூர்ந்து நோக்கட்டும்:

"லட்சோப லட்சம் மக்கள், அன்றாட காலட்சேபத்துக்கே அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு சிலர் ஆடம்பரமான விருந்துகள் மூலம் பண டம்பத்தைக் காட்டுவதில் ஆபாசம் நிழலாடுகிறது."

என்று, இந்திய வர்த்தக—தொழில் சம்மேளன மாநாட்டில் பேசிய நேரு குறிப்பிட்டார்.

மேல் நாடுகளில் சுற்றி, ஆடம்பரத்தை — ஆடை அணிவது முதல் அருந்துவதுவரை எல்லா வகைகளையும் மேற்கொண்ட நேரு அவர்கள், ஆடம்பரத்தை இடித்துக் காட்டவில்லை. அந்த ஆடம்பரத்திலே நிழலாடும் ஆபாசத்தையே சுட்டிக் காட்டி, அந்த ஆபாசம் அருவருப்பை ஊட்டுகிறது என்றும் இந்தியாவின் தலைநகரமான டில்லியிலேயே இத்தகைய தகாத செயல்கள் நடப்பது, நாட்டின் இதரபகுதிகளுக்கு, தலைநகரம் தகாத செயலைக் கற்பிப்பது போலாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

விருந்தில், ஆபாசம் நிழலாடிற்று என்று பண்டிதர் சூசகமாகக் குறிப்பிட்டு அதை வெறுப்பதாகவும் குறிப்பிட்டார். அந்த நிழல்—ஆபாசம்—எது என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், உண்மை புலப்படும். ஆபாசம் நிழலாடும் விருந்து நடைபெற்றதென்றால், மதுபான வகைகள் அங்கு அளவுமீறி நடைபெற்றது என்று ஐயத்திற்குச்சற்றும் இடமின்றி நன்கு புலனாகின்றது.

இப்படிப்பட்ட விருந்துகளை உத்தியோகஸ்தர்களும், உத்தியோக சார்பற்றவர்களும் அடிக்கடி நேரு அவர்களுக்கு அளித்து, அதனால், அலுப்பேற்படும்படி செய்து விட்டிருக்கின்றனர். அவரும்தான் என்ன செய்வார்? அளவுக்கு மீறாத வகையில் விருந்துகள் நடைபெற்றிருந்தால், இந்த விசனிக்கத்தக்க செய்தியை வெளியிட்டிருக்கமாட்டார்.

யூகத்தின் துணைகொண்டு, மதுபான விருந்துகள் அடிக்கடி புதுடில்லியில், நடைபெற்றன என்றும், அந்த விருந்தினையே நேரு கண்டித்தார் என்றும் கூறுவது தகாதது—சரியாகாது எனச் சீறியெழும் காங்கிரஸ் அன்பர்கள், மதுபான விருந்துகளைக் கண்டித்து நேருஜி பேசியிருப்பதை வரவேற்று, சேட் கோவிந்ததாஸ் எம். பி. விடுத்திருக்கும் அறிக்கையை படித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

'சட்டசபை மெம்பரோ' மந்திரியோ மதுபான விருந்து எதும் நடத்தக் கூடாது. அம்மாதிரி விருந்துக்குப் போகவும் கூடாது.

பிரிட்டிஷ் ஆட்சியின் போதுகூட இதற்குமுன், இன்று காணப்படுவது போல இவ்வளவு அதிகமான மதுபான விருந்துகள் இருந்ததில்லை"

என்று விளக்கமாக, தம் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

அவர் தந்திருக்கும் வாசகங்களை ஒருமுறை படித்தாலே போதுமானது. இதுவரையில், சட்டசபை மெம்பர்களும் மந்திரிகளும், மதுபான விருந்துகள் நடத்திவந்தபோதிலும்—மதுபான விருந்துக்கு போயிருந்தபோதிலும்—இனியேனும் போகக்கூடாது என்று நன்கு தெரிவித்திருக்கிறார்.

மதுபானம் கூடாது என்று பேசி, மதுவிலக்குச் சட்டத்தைக்கொண்டு வந்து, அதனால் மகாத்மாவின் ஆத்மாவுக்கு சாந்தியளிப்பதாகக் கூறிக்கொள்கிறார்களே, அதே காங்கிரஸ்காரர்கள் மதுபான விருந்துகளை நடத்துகிறார்கள் என்றும் மதுபான விருந்துகளுக்குப் போகிறார்கள் என்றும் கூறினால்—அதுவும் சட்டசபையிலே உள்ள மெம்பர்கள் என்றால்—மது விலக்கு எப்படி வெற்றி பெறும்? மகாத்மாவின் ஆத்மா எப்படி சாந்திபெறும்? காங்கிரசிலுள்ள

கண்ணியமுள்ளவர்கள் கூறட்டும்—கூறவேண்டாம்—சிந்தித்துப் பார்க்கட்டும்.

ஆங்கிலேயர்களோ, குடியிலே மிகவும் ஊறிப்போனவர்கள். அவர்கள் ஆட்சியின்போதுகூட, இன்று காணப்படுவதுபோல அதிகமான மதுபான விருந்துகள் நடைபெற்றதில்லை யென்றால், எந்த அளவு—இந்தியாவின் தலைநகரிலே—மதுபான வகை விருந்துகள் நடைபெறுகின்றன என்பதை உங்கள் மனக்கண் முன்னால் கொண்டு வந்து பாருங்கள். அந்த அளவுமீறிய மதுபானங்களை, சட்டசபை மெம்பர்களும், மந்திரிகளும், உபயோகிக்கிறார்கள் என்று கூறினால்—இந்த நாட்டில் மதுவிலக்கு வெற்றி பெறுமா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்!

மதுபான வகை கடைகளின் முன்பு, குடிக்கப் போகிறவர்களைக் கண்டு, கும்பிடு போட்டு, 'குடிப்பது கூடாது குடியைக்கெடுக்கும், கொடுமையைத் தரும்' என்று கூறி, குடியர்களின் அடிக்கும் உதைக்கும் ஆளான காங்கிரஸ் உண்மை வழியர்கள், இன்று ஊராள்வோரே, அளவுக்கு மீறிய குடி வகை அருந்துகிறார்கள்—அவர்கள் அருந்துவதைத் தடுக்க அறிக்கை தேவைப்படுகிறது என்பதை அறியும் பொழுது—அவர்களின் தேசத்தொண்டு, தங்கள் தலைவர்களாலேயே கேலி செய்யப்படுகிறது என்பதை அறியும்பொழுது—கண்ணீர் சிந்தித்தான் தீருவர்!

கண்ணீர் சிந்தவேண்டிய இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொண்ட பண்டிதர் அவர்கள், அப்படிப்பட்ட விருந்துகள் அளவுக்குமீறி நடைபெற்று, அவருக்கு அலுப்பேற்படுத்திவிட்ட காரணத்தால், கண்டிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டு விட்டார்.

இந்த நாற்றமடிக்கும் செயலை, சர்க்காரே அறிக்கைவிட்டு, சுத்தப்படுத்த எண்ணினால், சர்வ தேசங்களும் சிரிப்பாய்ச் சிரிக்கும் என்ற காரணத்தால், சேட் கோவிந்ததாஸ் மூலம் இந்த அறிக்கை வெளியிட வேண்டியதாயிற்று என்று நாம் எண்ணவேண்டியிருக்கிறது.

சேட் கோவிந்ததாஸ், தன் அறிக்கையில் கூறும் மற்றொரு வாசகத்தை ஊன்றிக் கவனித்தால், எந்த அளவுக்கு அங்கு மதுபான வகைகள் நாற்றமடிக்கின்றன என்பது நன்கு புலனாகும்.

"இங்குள்ள சூழ்நிலையைப் பரிசுத்தப்படுத்துவது மிக அவசியம்."

மிக அவசியமாகப் பரிசுத்தப்படுத்தவேண்டிய மோசமான நிலையில், மதுவின் மோகத்தில், மந்திரிகளும், சட்டசபை மெம்பர்களும் மூழ்கிக்கிடக்கிறார்கள்—மூழ்கிக் கிடக்கும்படி ஆக்கப்படுகிறார்கள்—என்று நன்கு புலப்படுகிறது.

ஆந்திராவில் 'மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது, மதுவில் மக்களை ஆழ்த்தக்கூடாது' என்று சுவாமி சீதாராமைய்யா உண்ணாநோன்பிருந்து உயிரையே தத்தம் செய்யும் நிலையிலிருக்கும் இதே நேரத்தில்தான், அங்கே — டில்லியில்—தலைநகரில்—தலைவர்களிடையில், துர்நாற்றம், மூடிவைக்கமுடியாத அளவுக்கு மேலோங்கி நிற்கிறது—அதைப் பரிசுத்தப்படுத்த அறிக்கை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆபாசம் நிழலாடும் விருந்துகளை அரும்பிலேயே அகற்றும் வேலையை மேற்கொண்டிருந்தால் — அரும்பக் கூடாதவகையில் நடந்துகொண்டிருந்தால்—அறிக்கையின்மூலம் பரிசுத்தப்படுத்தும் பணியை மேற்கொண்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஒரு செயலை—தீய செயலை—செய்யக்கூடாது என்று கொள்கையாகக் கொண்டிருக்கும் செயலை—நடைபெறக் கேட்டு வாளா இருப்பதே தவறு. கேட்டு, வாளாய் இருந்தனர் என்ற செய்தி அல்ல நமக்கு அறிவிக்கப்படுவது! அந்தத் தீய செயலில் பங்கேற்றனர் என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது!—இது எத்தகைய மன்னிக்க முடியாத மாபெரும் தவறு என்பதை மனச்சாட்சியை அடகுவைக்க முடியாத மாண்புமிக்கோர் நன்கு அறிவர். அந்த மாபெரும் தவறுக்கு உள்ளாகக்கூடாது என்று மறைத்துக் கொள்ளும் போர்வையாகவே, இன்று கண்டனங்களும் அறிக்கைகளும் வெளிவருகின்றன. இது பரிகசிக்கக்கூடிய ஒரு செயலாகும்.

திருடுவதைக் கண்டும் வாய் பொத்தி நிற்பது தவறு. அதைவிடத் தவறு—திருட்டில் பங்கேற்பது! திருட்டில் பங்கும் பெற்றுவிட்டு, 'இனி எவரும் திருடக் கூடாது' எனக் கண்டிக்கும் கள்ளனின் செயலினைப் போன்றே இன்றைய இந்தச் சம்பவம் மிளிர்கிறது!

ஆபாசம் வளர அருந்துணையாக இருந்துவிட்டு, இன்று, இடித்துரை வாயிலாக போக்கிவிடலாம் என்றும், அறிக்கை மூலமாக அகற்றிவிடலாம் என்றும் நினைப்பது ஆகக்கூடிய காரியமா என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்! எனவே, மற்றவர்களின் கண்களுக்கு மாசுமறுவற்றவர்கள் எனக் காட்டிக்கொள்ள வேண்டும் எனும் போர்வையாக உதவவே இவைகள் பயன்படும்! ஆபாசம் நிழலாடுவதை அகற்றாது—அகற்றப் பயன்படாது!

'இருப்பது பொய், போவது மெய்' என்று கூறிவிட்டு, இரும்புப் பெட்டியின் சாவியை இடுப்பிலே இறுக முடிபோட்டு வைத்துக் கொண்டு, இன்பங்கள் அனைத்தையும் தான் அனுபவித்துக்கொண்டு மற்றவர்களை 'இளித்தவாயர்'களாக ஆக்கிவைத்திருக்கும் மதவாதியை ஆரத்தழுவிக்கொண்டு—அவனுக்கு அன்பும் ஆதரவும் அளித்துக் கொண்டு — பழமைக்குப் பக்க மேளம் அடித்துக்கொண்டு—மற்ற நாட்டவர்களைப்போல நாமும் முன்னேறவேண்டும் என்று கூறும் பசப்பு மொழியைப் போன்றதாகும்—இந்த மதுவிலக்கும் இதனையொட்டி எடுக்கப்படும் நடவடிக்கைகளும்!

பசப்புமொழி — பயன் தராது. பாதகம் தொலையவேண்டும் என உளமார எண்ணினால், செயல் முறையில் இறங்கவேண்டும்!—எண்ணத்தோடு உழைப்பையும் கலக்க வேண்டும்—அதுதான் நாட்டைக் காப்பாற்றும் நல்வழி! — நானிலம் போற்றும் சிறந்த வழி!

★

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச் சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 14—3—54 [ஞாயிறு

கைத்தறி வாரம்!

★

கைத்தறி ஜவுளி ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பது திருப்தியை அளிக்கக் கூடிய விஷயமாகும்.

—ஜனாதிபதி

*

நம் பொருளாதாரத் துறையில் கைத்தறி நெசவாளர்கள் எந்த ஸ்தானத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காக செய்யப்படும் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

—உதவி ஜனாதிபதி.

*

கைத்தறித் தொழில் இந்தியாவிலுள்ள நமது மிகப் பெரிய கைத் தொழில்களில் ஒன்றாக இருந்துவந்திருக்கிறது. இப்பெரும் தொழிலில் சர்க்காரும் மக்களும் குறிப்பிட்ட கவனத்தைச் செலுத்த வேண்டும். கைத்தறி ஜவுளி உற்பத்தியையும், விற்பனையையும் வளர்ப்பதற்காக எல்லா முயற்சியையும் நான் வரவேற்கிறேன்.

—நேரு.

*

அழியும் கைத்தறிக் குடும்பங்களைப் பட்டினியினின்றும் பாதுகாப்பதே தங்களுடைய நோக்கம். நம் நாட்டில் இரண்டாவது பெரிய கைத்தொழிலாகிய கைத்தறி நெசவு நிரந்தரமான பாதுகாப்பளிக்கும் வியாபாரத்தின்மூலம், மற்ற நியாய மற்ற போட்டிகளினின்றும் காக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதில் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் பொருட்படுத்தக்கூடாது.

—சி. ஆர்.

* * *

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு அவதியுற்று அலையும் அருமைக் கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கப்படும், இன்னல் அகற்றப்படும், இடுக்கண் விரட்டப்படும் என்ற இன்பத்தேன் சொட்டும் செய்தியைக் காண மனம் மகிழாதார் இருக்கவே முடியாது. நம்மாலாகுமா என்ற ஏக்கம், முடியவில்லையே என்ற பெருமூச்சு, இந்தக் காட்சிகளைக் காண்பதால் ஏற்படும் வேதனை, இவைகளெல்லாம் இனி நாட்டில் இருக்காது; நாட்டைப் பிடித்து ஆட்டி, நல்லவர் மனதை உலுக்கிவந்த அவலச் செய்தியை இனி கேட்கமுடியாது என்றெல்லாம் எண்ணத்தக்கவகையிலே வந்துகொண்டிருக்கும் நம்பிக்கை நாதத்தின் சில பகுதிகளே மேலே தரப்பட்டவையாகும். நாவசைத்தால் நானிலமே வரவேற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள மதிப்பிற்குரிய மாபெரும் தலைவர்களெல்லாம், மண்ணிலே நெளியும் புழுவாய்க் காட்சியளிக்கும் நெசவாளர்களின் பிரச்சினைபற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

அனைத்திந்திய கைத்தறிக் கூட்டுறவு கழகத்தாரின் முயற்சியாலும் வேண்டுகோளாலும் இப்போது நாடெங்கும் கைத்தறிவாரம் கொண்டாடப் படுவதையும், அந்த விழாவுக்கு அரசியலாரின் ஆதரவுபெரிதும் இருந்து வருவதையும் காணப் பெரிதும் மகிழ்கிறோம். இந்த மகிழ்ச்சி என்றும் எங்கும் இருக்க வேண்டும் என்றும் எண்ணுகிறோம்.

பிரச்னை பெரிது, பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம். நிவாரணம் உடனடியாகத் தேவை யென்றெல்லாம், சிறு பொறியைக் கண்டபோதே எச்சரித்தோம். கவனிக்கவில்லை. புகை கிளம்ப ஆரம்பித்தது. அப்போதும் அசையவில்லை. நம்மாலானதைச் செய்வோம் என்று புறப்பட்டோம். நமது கழக முன்னணியினர் நாடெல்லாம் சுற்றினர் கைத்தறி சுமந்து......பெரும் அளவில் அந்தத் துணிகளை விற்றோம். தேங்கிக் கிடக்கும் துணிகள் ஏந்தியிருக்கும் துயரத்தை மக்கள் மன்றம் காணும் வாய்ப்பை ஏற்படுத்தினோம். இன்று கைத்தறித் துணிகளையே உடுத்துவோம் என்ற ஒரு பரபரப்பை நாட்டு மக்களிடையே ஏற்படுத்தினோம். அப்போதெல்லாம், இல்லாத அக்கரை இப்போது பெருந்தீயைக் கண்டதும், ஏற்பட்டிருக்கிறது. நீர்நிலை தேடுகிறார்கள். இந்த அளவுக்காவது அவர்கள் இதயம் நெகிழ்ந்ததைக் கண்டு நாம் மகிழாமல் இருக்கமுடியவில்லை. நீர் நிலை தேடுவதோடு இருந்து விடக்கூடாது அவர்கள் என்பதற்காகவே மேலும் சில எழுத வேண்டியிருக்கிறது. எங்கு பார்த்தாலும் தீயின் கோரம் தெரிகிறது. அணைக்க, தேவைப்படும் தண்ணீரோ இருக்கிறது. கிடைக்கும் பொருளைக்கொண்டு நெருப்பை அணைக்கத்தக்க முயற்சியிலும் ஈடுபடவேண்டும் என்பதே நமது அவா வாகும். அந்த முயற்சியில் வெற்றி நிச்சயம் கிட்டும். தீயணைக்கும் திறமைமிகு படை அவர்களிடமிருக்கிறது. படையினரிடமோ பயிற்சி அதிகம் இல்லாவிட்டாலும், பாத்திரங்கள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, அவர்கள் நாவின் அசைவிலே நர்த்தனமாடிய அந்த நல்ல வார்த்தைகள், செயலுருக்கொண்டு, செல்வத்தைத்தேய்க்கும் படையாகிய கண்ணீரைத் துடைக்கவேண்டும் என்பதை நினைவுறுத்துகிறோம். வாய்ச் சொல்லில் வீரரடி பாப்பா என்ற பாட்டாகி விட்டால், காதுக்கு ருசி, வாய்க்குப் பயனில்லை என்றாகிவிடும். கைத்தறிக்காரர்கள் நிலைமையைச் சரி

செய்ய வேண்டும் என்ற பேச்சு அந்த வட்டாரத்திலே தோன்றித் துவண்டுவிட்டது என்பதால்தான் இப்போதும் அப்படியாகிவிடக் கூடாதே என்ற எண்ணத்தோடு இதை எழுதுகிறோம்.

140 இலட்சம் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பெரும்பொறுப்பு சாதாரணமானதல்ல என்பதை மறந்துவிடக்கூடாது.

ஒரு காலத்திலே சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்கள்தான் இன்று தாழ்ந்துள்ளார்கள். எப்படி யெப்படி அவர்கள் வாழ்வு பறிக்கப்பட்டது என்பதையறிந்து நிவாரணம் தேடவேண்டியிருக்கிறது. தற்காலிகமாக அவர்களுக்குக் கடன் கொடுப்பதன்மூலமாகவோ, கஞ்சி தொட்டிகளை அமைப்பதன்வாயிலாகவோ குறைகளைக் களைந்துவிட முடியாது. அறுத்து குணப்படுத்த வேண்டிய அளவுக்கு நோய் முற்றிவிட்டது.

நெசவுத் தொழில் நசித்ததன் மூலம், உயிரை அணு அணுவாக விட்டுக்கொண்டிருக்கும் மக்கள் பெரும் அளவில் வாழும் பகுதிகளில், மில் துணிகளை அறவே விற்க அனுமதிக்கக்கூடாது. அப்படிச் செய்தால் கைத்தறித்துணிக்குப் போட்டியில்லாததால், அங்குள்ளவர்கள் அவற்றைமட்டுமே வாங்குவார்கள்; விற்பனை அதிகமாகும்.

செய்வார்களா அரசியலார்? முதலாளிகளின் முதலைப் பிடியிலே சிக்கிச் சீரழியும் இவர்களுக்கு இந்தத் துணிவு வருமா? ஆலையூராரின் கருணை ஒன்றிருந்தால் போதும்— அதுவே இகம் பரம் இரண்டுக்கும் ஏற்றது என்ற எண்ணத்தில் திளைத்துள்ள இவர்கள், நாம் எடுத்துக்காட்டியுள்ளபடி செய்ய முயலுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்படி அவர்கள் செய்தால், அதனால் நேராகப் பாதிக்கப்படுபவர்கள், ஆலை முதலாளிகள். கைத்தறித்தொழில் நசித்ததற்கான முக்கிய காரணம், ஆலைத் தொழிலின் வளர்ச்சி. அப்போது ஆங்கிலேயர்கள், தங்களின் ஆலைகளிலிருந்து தயாரிக்கப்படும் துணிகள் மக்களிடம் செல்வாக்கடையவேண்டும் என்ற இலாப நோக்குடனேயே கைத்தறிமீது பல தடைகளை விதித்து, அந்தத் தொழிலை நசுக்க முயன்றனர். யுத்த காலத்தில், மறுபடியும் கைத்தறி உயிர்பெற்றது. மில்கள் யாவும் யுத்தகாரியங்களுக்கான உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. போர் முடிந்ததும், மீண்டும் போட்டி — கைத்தறிக்கு ஆதரவு வளர்ந்தால் நிச்சயம் மில் துணிகளுக்குக் கிராக்கி இருக்காது என்பதை உணர்ந்தவர்கள் முதலாளிகள். (முன்பு வெள்ளைக்கார முதலாளிகள் இருந்த இடத்தில் இப்போது இந்திய முதலாளிகள்). ஆக அவர்கள் அரசியலில் தங்களுக்கிருக்கும் செல்வாக்கைக்கொண்டு கைத்தறி ஏற்றுமதி போன்றவைகளுக்குத் தடை விதிக்கச் செய்து, அந்தத் தொழிலை நடைபெறவொட்டாது தடுத்துவிட்டனர். எனவேதான், நாம் குறிப்பிட்டபடி தடை விதிக்கப்பட்டால், அவர்கள் பேசாமலா இருப்பார்கள். ஒரு சிலரே ஆகிய நம் சுக வாழ்வுக்காக, பல இலட்சக்கணக்கான மக்கள் படாத பாடு படுகிறார்களே, அவர்களின் தாழ்வு பறக்கவும், வாழ்வு மலரவுமான நல்ல காரியத்தை நாமாகவே செய்யலாம் என்று மனம் மாறிவிடுவார்கள்—எந்த நாட்டு முதலாளியும், எந்தக் காலத்திலும் தாமாகவே ஏழை உயர்வடைய எதையும் செய்ததாக சரித்திரமே கூறவில்லையே— ஆகவேதான், அரசாங்கம் தன் கவனத்தை இந்தப் பக்கம் திருப்ப வேண்டும் என்று கூறுகிறோம்.

கருணை வழிந்த விழியிலே கொஞ்சம் கடுமை தெரியும். அது போதுமே, நம் கனம்களுக்கு. பஞ்சைகளுக்காக பணத்திடம் பகைமையா? கூடாது என்று எண்ணியல்லவோ, தாங்கள் ஏதோ தவறாகச் செய்துவிட்டதாகக்கூட மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வருவார்கள். எனவேதான், இவர்களின் கடந்த கால போக்கையும் நிகழ்கால நிலைமையையும் நன்கறிந்தேதான் இவற்றை எழுதுகிறோம்; இனியாவது இந்நாட்டு மன்னர்களை வாழ்விக்க ஆவன செய்ய முன்வரவேண்டும் என அழைக்கிறோம்.

உலகின் மற்றெல்லா நாடுகளையும் விட, மிக மிகக் குறைந்த அளவு வாழ்க்கை வசதி பெற்றுள்ள இந்தத் துணைக்கண்டத்து மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு, அயல் நாடுகளிலே தூதுவராலயங்களாக உருப்பெற்றுள்ளதே அவைகளின் மூலமாகவும் கைத்தறி நெசவுக்கு ஆதரவளிக்கலாம். கைத்தறித்துணி ஏற்றுமதியை அதிகப்படுத்தலாம். சிங்கப்பூர், ரங்கூன், கொழும்பு, அந்தமான், மொராக்கா, பாக்தாத் போன்ற இடங்களுக்கெல்லாம் பெரும் அளவிலே முன்பு நம் நாட்டுக் கைத்தறித் துணி சென்று கொண்டிருந்த நிலைமையை, இன்றும் உருவாக்கலாம்.

மில் துணிகளை அங்கெல்லாம் அனுப்புவதற்குப் பதிலாக, கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய எல்லாவிதமான உரிமைகளையும், கைத்தறி சம்மந்தப்பட்டவர்களுக்குச் செய்து தருவதன்மூலம் நெசவாளர் துயர்துடைக்கலாம். மற்றும் கைத்தறிமீது இருக்கும், தொழிலைப் பாதிக்கும் எல்லாவிதமான தடைகளையும் நீக்கி, அந்தத்தொழில் வளரச் செய்யலாம். இப்படி பலப்பல யோசனைகளை நாமும் ஓயாது சொல்லித்தான் வருகிறோம் ஆனால் உருவான பலனைத்தான் காணமுடியவில்லை.

அனைத்துலக அரங்கிலே, இடமிருக்கிறது, வல்லரசுகளின் நட்பு இருக்கிறது என்றாலும், வாழவிரும்பியும், முடியாமல் மடியும் மக்களைக் கொண்ட நாட்டிலேதான் இருக்கிறோம் என்பதையும் மறந்து விடக்கூடாது. மதோன்மத்தன் ஆளுகிறான், மகேசன் கட்டளைப்படிதான் ஆட்சி செலுத்துகிறான், கொடுமை அவன்பொழுதுபோக்கு, என்றெல்லாம் கேட்ட ஒலி இப்போது எங்கும் கேட்பதில்லை. எதிர்பாராத நேரத்திலே, கொஞ்சமும் எதிர்நோக்கா முறையிலே அரசு கவிழ்கிறது; அதிகாரங்கள் குவிய வேண்டும் என்ற அவனின் அவாவே அவன் அழிவின் அஸ்திவாரம் என்று அறிவிக்கப்படுகிறது. இப்படி பல அரசு அழியும், தோன்

றும் சம்பவங்கள் உலகிலே அதிகமாகிவிட்டன. மிகமிக நாகரீகமான நாட்களிலே வாழ்கிறோம். மனிதர்கள்மனிதர்களாகவேவாழவேண்டும். இந்த உயிர்ப் பிரச்னை நிறைவேற்றப்படா முன்னர் வெளிநாடுகளிலே நம் நிலை உயர்ந்து என்ன பலன்?

கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் நல்ல காரியத்துக்கு, தென்னாட்டைப் பொறுத்தவரையில், மக்களின் ஒருமித்த ஆதரவு இருக்கிறது. மேலும் செய்யப்பட வேண்டியவைகள் அனைத்தும் அரசாங்கத்திடமே எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்திந்தியப் போக்கில் எப்படியும் நெசவாளர்களின் குறைகள் போக்கப்படவேண்டும் என்பதாக எல்லா மாகாண முதலமைச்சர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். நெசவாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை உருவாக்கும், நல்ல சூழ்நிலைஏற்பட்டுள்ளது. ஒரு நல்ல காரியமாவது இன்றைய அரசால் செய்யப்படவேண்டும் என்ற மக்களின் நெடு நாளைய அவாவைப் பூர்த்தி செய்ய இப்போதாவது முன்வருவார்களா? அன்றி வழக்கத்துக்கும், பண்புக்கும் மாறாக, எப்படிச் செய்வது என்று இருந்து விடுவார்களா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். என்றாலும் ஒன்று மட்டும் உறுதி. நெசவாளர் படும் அவதியை அகற்ற அரசாங்கம் எடுக்கும் எல்லாவித நல்ல, உருப்படியான முயற்சிக்கும், தி. மு. க. ஆதரவு தரும் — அவர்களோடு தோளோடு தோள் சேர நின்று என்றும் ஒத்துழைக்கும்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

கள் இந்தப் பாகப் பிரிவினையை மறுக்கிறார்கள்!

ஒற்றுமையின் உறைவிடம் எங்கே—எப்படி என்பதை அறியாத அப்பாவிகள் இந்தப் பாகப் பிரிவினையை மறுக்கிறார்கள்!

பொதுநலம் பேண விரும்பாப் புல்லுருவிகள் இந்தப் பாகப் பிரிவினையை மறுக்கிறார்கள்!

நாட்டின் நல்வாழ்வில் நல்லெண்ணம் கொள்ளாத நயவஞ்சகர்கள் இந்தப் பாகப் பிரிவினையை மறுக்கிறார்கள்!

அந்நியன் படையெடுப்பை அணைத்துக்கொள்ள விரும்பும் அக்ரமக்காரர்கள் இந்தப் பாகப்பிரிவினையை மறுக்கிறார்கள்!

குடும்பச்சண்டை ஏற்பட்டால் தமக்குக் கொண்டாட்டம்தான் என்று கருதும் குள்ளநரிகள் இந்தப் பாகப்பிரிவினையை மறுக்கின்றன!

வைக்கோல் போர்க் குக்கல்மனப்பான்மை கொண்டோர் இந்தப் பிரிவினையை மறுக்கின்றனர்!

உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசும் உலுத்தர்கள் இந்தப் பாகப்பிரிவினையைமறுக்கின்றனர்!

இப்படிப்பட்ட இழிவு மனப்பான்மை கொண்டவர்கள்—இளித்தவாயர்கள் — ஏமாந்தவர்கள்-எத்தர்களைத் தவிர, கருத்தில் தெளிவும், சொல்லில் உறுதியும், நடத்தையில் நேர்மையும்கொண்ட எவரும் இதனை மறுக்கமாட்டார்கள்! மறுக்க முயன்றாலும், அந்த முயற்சியை மறைக்க முடிவதில்லை. அதோ அன்றைய முதலமைச்சர் ஓமந்தூரார் கூறுகிறார்,

“மத்திய சர்க்கார் இந்த மாகாண சர்க்காரிடம் நடந்து கொண்ட போக்கின் காரணமாக, வேறுவழியின்றி, நான் பல தடவை ஆத்திரம் கொண்டிருக்கிறேன்”

என்று மனம் நொந்து கூறுகிறார். நேர்மையின் உறைவிடத்தை அறிந்தவர் ஓமந்தூரார் என்பது அவருக்குக் கிடைத்த ஒரு பெருமையாகும். அப்படிப்பட்டவரே, மத்திய சர்க்காரால் மாகாண சர்க்கார் பல வழிகளில் தொல்லைப்படுகிறதென்ற துயரச் செய்தியைக்கூறுகிறார் என்றால், அதில் எவ்வளவு உண்மைகள் வெளியே காட்டிக்கொள்ளக்கூடாத —முடியாத அளவுக்கு அடங்கிக் கிடக்கின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. ஓமந்தூரார் இப்போதுள்ள நிலையில், நம்முடைய திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ள முடியாத துர்ப்பாக்கியத்தை அடைந்திருந்தபோதிலும், திராவிடநாடு தனியாகப் பிரிந்தே தீரும் என்று நேரு சர்க்காருக்கு எச்சரிக்கை செய்வதன் வாயிலாகத் தம்முடைய அந்தரங்கம் எது என்பதை விளக்கியிருக்கிறார். அவர் போகட்டும், அவர் அதிகாரத்தில் இல்லை, எனவே அவர் கூறுவதற்கு வாயிஸ் (Voice) அதாவது செல்வாக்கில்லை என்று சிலர்கருதக் கூடும். ஆனால், இதோ இன்றைய முதலமைச்சராம்ஆச்சாரியாரேகூறுகிறார், திராவிடநாடு தனியாகப் பிரிந்தே ஆகவேண்டும் என்பதாக!

நம்மை நச்சுப்பூச்சிகள், எறும்புகள், ஒற்றுமையைக் குலைப்பவர்கள், துவேஷத்தை வளர்ப்பவர்கள், சதிரிகள், விஷமிகள் என்றெல்லாம் வர்ணிக்கும் ஆச்சாரியாரே, நம்முடைய இலட்சியத்தை ஒப்புக்கொள்கிறார்!

ஆனந்த விகடன் படம் போட்டுக் காட்டி விளக்கம் கூறும் அளவுக்கு, அவர் நம்முடைய குறிக்கோளை ஒப்புக்கொள்கிறார்!

சட்டசபையிலே, பட்ஜெட் போன்ற உயிர்ப் பிரச்னைபற்றிப் பேசப்படும் சமயத்தில், அவர் நம்முடைய கொள்கையை ஆதரிக்கிறார்!

சமயம் நேரும்போதெல்லாம்—அதாவது, டில்லி சர்க்கார் சென்னை சர்க்காரை அலட்சியப்படுத்தும் போதெல்லாம், அவர், “திராவிட நாடு திராவிடருக்கே” என்று முழங்கத் தவறுவதில்லை!

ஆச்சாரியாரின் இந்த ‘ஆதரிப்பு முறை’ இருக்கிறதே! அதைப் பார்க்கும்போது, அண்மையில் வெளிவந்த ஒரு சினிமாப் படத்தின் ஒரு காட்சி, என்னுடைய நினைவுக்கு வருகிறது. ஆச்சாரியாரின் நண்பராம் வாசன் அவர்களின் தயாரிப்பால் வெளிவந்த ‘ராஜி என் கண்மணி’ என்ற படத்தில், ஒரு ‘இராக் குடியனின்’ சேட்டைகள் காண்பிக்கப்படுகிறது. அதாவது, தற்கால மதுவிலக்குச் சட்டத்தை அனுசரித்து, பகலில் பகிரங்கமாகக் குடிக்கக்கூடாது—இரவில் வேண்டுமானால் குடித்து கும்மாளம் அடிக்கலாம்—அதைத் தடுக்கவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுவது

போல் அக்காட்சி அமைந்திருக்கிறது. அது எப்படியோ போகட்டும்! அது அவர்களுடைய விஷயம்! அந்தப் படத்தில் காட்டப்படும் மேற்படி சம்பவம், இராக் குடியன் பகலில் நல்லவனாகிறான் அல்லது நல்லவன் குடித்துவிட்டால் சேட்டைகள் செய்ய ஆரம்பித்து விடுகிறான் என்பதே அச்சம்பவத்தின் நோக்கமாகும் என்றுதான் நான் கருதுகிறேன்—மற்றவர்களும் அப்படித்தான் கருதுவார்கள். ஆனால், பகலில் குடிக்காமல் இரவில் மட்டும் குடிக்கும் இரகசியம் என்ன என்று அறியவேண்டிய அவசியம், அதுசம்பந்தப்பட்டவர்களுக்கே இல்லாதபோது நமக்கேன்?

இந்தச் சம்பவம் ஆச்சாரியாரின் இன்றைய நிலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறதென்பதை விளக்கவே இதனைக் குறிப்பிடுகிறேன். அந்த இராக் குடியன், தன்னுடைய குடி மயக்கத்தில் என்ன செய்கிறான் என்பதை மறந்துவிடுவதும், குடி போதை தெளிந்ததும் பெரிய மனிதனாகி விடுவதும் போல் சித்தரிக்கப்பட்டிருக்கும் அந்தச் சம்பவம் ஆச்சாரியாரை மனதில் வைத்துக்கொண்டுதான் சித்தரிக்கப்பட்டதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. அவ்வளவு கன பொருத்தமாக அது காட்சியளிக்கிறது!

மத்திய சர்க்கார் அவ்வப்போது ஆச்சாரியாரை அழைத்து "அதிகாரம்" என்னும் போதையை அதிக அளவில், அதாவது, அவரால் தாங்க முடியாத அளவில் கொடுத்து விடுகிறார்கள்! விலகி நின்றாலும் அவரை அவர்கள் விடுவதில்லை. ஒரு 'பெக்' ஆவது உட்கொள்ளும்படி செய்து விடுகிறார்கள். அதாவது, கவர்னர் ஜெனரல் பதவி என்றால், அது, மூன்று 'பெக்' அருந்துவது போன்றது! கவர்னர் பதவி என்றால் இரண்டு 'பெக்' உட்கொள்ளுவது போன்றது! மந்திரிப்பதவி என்றால் ஒரு 'பெக்' குடிப்பது போன்றது. இப்படிப்பட்ட போதைகளில் இருக்கும் அவர் தம்மை மறந்து ஏதேதோ சேட்டைகள் செய்ய ஆரம்பித்து விடுகிறார்—அதாவது இராக் குடியன் போல் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்யவும், பேச்சுக்களைப் பேசவும் ஆரம்பித்துவிடுகிறார். ஒவ்வொரு சமயங்களில் இவருக்கும் அந்தப் போதை தெளிகிறது. குடிபோதை சிறிது நேரம் தன்னுடைய கை வரிசையைக் காட்டிவிட்டுப் போய்விடும். ஆனால் இந்த அதிகார போதை இருக்கிறதே, இது, இலகுவில் தெளிவதில்லை. சில, மிக மிக நெருக்கடியான உயிர்ப் பிரச்னைகள் வரும் போதுதான், இராக் குடியனுக்கும் பகலில் ஏற்படும் இயற்கையான நல்ல சுபாவம் போல் இவருக்கும் ஏற்பட்டு விடுகிறது. அப்போது அவர் நிமிர்ந்து பார்க்கிறார், அதவது, தானும் இந்நாட்டுப் பிரஜைகளில் ஒருவர்தான் என்ற நல்லெண்ணம் அப்போது அவருக்கு உண்டாகிறதென்று பொருள். உடனே அவர் தன்னைப்பற்றியும் தன் நாட்டைப் பற்றியும் எண்ணுகிறார்—எண்ணிய எண்ணத்தை எல்லோருக்கும் தெரிவித்தும் விடுகிறார். "நான் இருட்டில் திரிந்த போது உண்மை புலப்படவில்லை—வெளிச்சம் ஏற்பட்டதும் உண்மை எது என்பது தெரிகிறது" என்று தைரியமாகவே கூறியும் விடுகிறார். உடனே பகல் மறைந்துவிடுகிறது. இருள் சூழ்ந்து—அதோடு உண்மையும் மறைந்துவிடுகிறது. மீண்டும் அந்தப் போதை தன் இருப்பிடத்துக்கு வந்துவிடுகிறது — தாறுமாறாகப் பேசவும் நடக்கவும் செய்துவிடுகிறது.

26–2–54-ல் சென்னை மேல்சபையில் பட்ஜெட் விவாதம் நடைபெற்றது. அந்தச் சமயத்தில் இரண்டொரு விநாடிகள் ஆச்சாரியாரின் அதிகார போதை நிதான நிலையை அடைந்திருந்தது. அதாவது, இந்த மாகாணம் எதனால் இவ்வளவு கீழ் நிலையை அடைந்திருக்கிறதென்ற உண்மை தெரிந்தது. உடனே,

> "இப்பொழுது மாகாண சர்க்கார்களுக்கும் மத்யசர்க்காருக்குமிடையே வரி இனங்கள் விநியோகிக்கப்படும் நிலை நீடிக்கும்வரை, தேவைக்கும் பொறுப்புக்கும் ஏற்றபடி மாகாண சர்க்கார்களுக்கு வருவாய் கிடைக்கமுடியாது. எனவே, இந்த விநியோக முறை மாறும்வரை வரிகளை உயர்த்துவது தவிர்க்க முடியாதது"

என்று பேசிவிட்டார். அதற்குள் அந்தப் போதை—அதிகார போதை அவரைக் கப்பிக் கொண்டது. அந்த இராக்குடிகாரன் தன்னுடைய இரும்புப் பெட்டியை திறந்துவிட்டதைப்போல், சென்னை மாகாண வருவாய் என்ற இரும்புப் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு "மத்திய சர்க்காரே! வருக, வருக! நமது வருவாயின் பெரும் பகுதியை வாரிக்கொண்டு செல்க, செல்க!" என்று சேட்டைகள் செய்ய ஆரம்பித்து விடுகிறார். அந்தச் சமயத்தில் எதிர்க்கட்சி மெம்பர்கள் இருக்கும் பக்கத்திலிருந்து யாரோ ஒருவர் ஒரு 'சுவிச்சை'ப் போடுகிறார். அதாவது, மத்திய சர்க்காரின் பிடியில் இருந்து நாம் விடுபட்டாலன்றி நமக்கு (திராவிடர்களுக்கு) விமோசனம் கிடையாதென்ற வெளிச்சத்தை உண்டாக்குகிறார். அந்த வெளிச்சம் ஆச்சாரியாரின் அதிகார போதையைச் சிறிது தெளியவைக்கிறது. அதாவது முன்பைவிட இரண்டொரு விநாடிகள் அதிகமாகத் தெளிவை உண்டாக்கி விடுகிறது. அப்போது, 'மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கிடையே உள்ள வரி இனங்களின் பிரிவினையால் ஏற்படும் கோளாறுகளையும் கஷ்டங்களையும் நான் உணர்கிறேன். வரி அமைப்புமுறை முற்றிலும் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதுதான் என் கருத்து. வரி இனங்களைப் பிரிக்கும் முறை நேர்மையானதாக இல்லை — விவேகமானதாகவும் இல்லை. அதனால் மக்களுக்கு வறுமையும் கஷ்டங்களும் இரட்டிப்பாகின்றன" என்று பேசியிருக்கிறார்.

ஆச்சாரியாரின் இந்தப் பேச்சில் அடங்கியுள்ள உட்பொருளை உற்று நோக்குபவர்களுக்கு — உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாப் பெரியவர்களுக்கு, நம்முடைய இலட்சியமான "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற அடிப்படைத் தத்துவம் அதில் அடங்கியிருப்பது தெரியும்.

கருத்தில் தெளிவுள்ள எவரும் நாம் கூறும் இந்த உண்மையை எந்தக் காரணத்தைக் காட்டியும் மறுக்கமாட்டார்கள். ஆச்சாரியார் தம்முடைய அதிகார போதை தெளிந்து, நிதான புத்தியுடன் இருக்கும்போதெல்லாம், இவ்விதம் பேசுவதை மறப்பதில்லை. முன்பொரு சமயம், தென்னாட்டுச் செல்வம் எல்லாம் வடநாட்டுக்கே போய்ச் சேருகின்றன என்பதைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பம் ஆச்சாரியாருக்குக் கிடைத்தபோது, அவர்,

> “வடநாட்டு ஆயர்குல மக்கள் தென்னாட்டுக்கு வந்து, இங்குள்ள பசுக்களின் பால் முழுவதையும் கறந்துகொண்டு போய் விடுகிறார்கள்—அதாவது, வடநாட்டு வியாபாரிகள், தென்னாட்டுக்கு வந்து வியாபாரம் செய்வதன் வாயிலாக இங்குள்ள—உற்பத்தியாகும் செல்வத்தை எல்லாம் சுருட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள்”

என்று பேசியிருக்கிறார். அந்தப் பேச்சை அடிப்படையாக வைத்து அந்தச் சமயத்தில் ‘சுதேசமித்திரன்’ ஒருபடமும் போட்டுக்காட்டி இருக்கிறது. ஒருவருக்குச் சொந்தமான ஒரு பசுவின் பாலை வேறொருவன் கறந்துகொண்டு போவது போல் படமெழுதி விளக்கியிருக்கிறது.

இப்படி அதிகார போதை தலையைச்சுற்ற வைக்கும் சமயங்களில் “அங்கு” போவதும், நிதானம் ஏற்படும் சமயங்களில் “இங்கு” வருவதுமாக ஊசலாடும் சுபாவம் ஆச்சாரியாருக்கு மட்டுமல்ல, அவரது பரம்பரைக்கே அன்று தொட்டு இன்றுவரை இருந்துவரும் ஒரு தவிர்க்கமுடியாத வழக்கம் — பழக்கத்தையொட்டி வருவதாகும்.

இந்த நிலை மாறவேண்டும்—மாற்றப்படவேண்டும் என்பதுதான் சமுதாயத்துறையில் நாம் கொண்டுள்ள அடிப்படை நோக்கமாகும்.

அரசியல் துறையிலே பொருளாதார விடுதலையும், சமுதாயத் துறையிலே இன விடுதலையும் பெறவேண்டுமென்பதுதான் நம்முடைய குறிக்கோளாகும். அதாவது அரசியலில் பொருளாதார சமத்துவமும் சமுதாயத்தில் சாதிமத வித்யாசம் இல்லாத நிலையும் ஏற்படவேண்டுமென்பதுதான் நம்முடைய முடிவான இலட்சியமாகும்.

இதற்கு இடையூறாக இருக்கும் எந்தவலிமை பொருந்திய சக்திகளையும் முறியடித்து முன்னேறுவதில் நாம் முனைந்திருக்கிறோம். இந்த உன்னதமான— உயரிய உண்மையை உணராதவர்கள்—உணர மறுப்பவர்கள், ஒற்றுமையைக் குலைப்பவர்கள் என்றும், ஜாதிமத துவேஷத்தை வளர்ப்பவர்கள் என்றும் வாய் ஓயாது பேசியும், கை ஓயாது எழுதியும் வருகிறார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களில் இருந்து அந்திக் கடைப் பொட்டலில் சுண்டல் விற்பவர்கள் வரை எல்லோருமே—நம்மை அறியாதவர்—அறியவிரும்பாதவர்கள் அனைவருமே இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற போதிலும் நாம் வளர்ந்து வருகிறோம்—திட்டத் திட்டத் திடகாத்திரம் பெற்று வருகிறோம். நம்முடைய இந்த வளர்ச்சியையும் பார்க்கிறார்கள்! —பார்க்கப் பார்க்கப் பகைமை உணர்ச்சி அதிகப்படுகிறது—வசைமாரியைப் பொழிகிறார்கள் — எலிகள்! எறும்புகள்! மூட்டைப்பூச்சிகள்! கறையான்கள்! நச்சுக் கிருமிகள்! என்ற “நல்ல வார்த்தை”களால் நம்மை நாவார வாழ்த்துகிறார்கள்! என்றபோதிலும் நாம் வளர்கிறோம்—வளமார் எமது திராவிடத்தைப் பெறும் அளவுக்கு வளர்கிறோம்! அகமிகமகிழ்கிறோம். “அவர்கள்” ஆத்திரப்படுகிறார்கள்! நம்மை ஒழித்துக்கட்டவேண்டும், இதுவே அவர்களுடைய முதல் வேலை—முக்கியமான வேலை என்று முறைப்பாகப் பேசுகிறார்கள்.

நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் இந்த நச்சுப் பூச்சிகளைப்பற்றியே எல்லோரும் நினைக்கவேண்டுமாம்! இந்த நச்சுப் பூச்சிகளை நசுக்கி எறிவதைத் தவிர, இப்போது அவர்களுக்கு – காங்கிரஸ்காரர்களுக்கு வேறு வேலை இருக்கக்கூடாதாம்! மாகாணத்து முதல் மந்திரி, மறைவின்றி மாநாடு கூட்டி, இந்த அரும்பெரும் உபதேசத்தைத் தம்முடைய சீடகோடிகளுக்கு உபதேசிக்கிறார். இனிமேல் காங்கிரஸ்காரர்கள் யாராவது—எங்காவது மாநாடு கூட்டினால், அது இதுபற்றியதாகவே இருக்கவேண்டுமாம்! அண்மையில், உத்தரமேரூரில் கூட்டப்பட்ட காங்கிரஸ் மாநாடும், இதற்காகவேதான் கூட்டப்பட்டதாம்!

> “இந்தப் பூச்சிபற்றித்தான் எல்லோரும் நினைக்கவேண்டும். இது பொதுவான விஷயம். இந்த வியாதியைத் தீர்க்கவேண்டும். இதில் சந்தேகம்கொள்ள வேண்டாம். இதற்காகத்தான் இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறீர்கள். வியாதி தீரும் என்பதில் சந்தேகமில்லை”

என்று சண்டமாருதப் பிரசங்கமாரியை, மாகாண முதன் மந்திரி—மறையவர் குல திலகம், காற்றுடன் கூடிய கடுமழையெனப் பொழிந்திருக்கிறார்.

நச்சுப்பூச்சிகளை, அதாவது நம்மை ஒழித்துக்கட்டிவிட்டால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போன மாதிரிதானாம். ‘தீர்க்கதரிசியாம்’ ஆச்சாரியார், வேதபாராயணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் கோயிலில—மாநாட்டில் நின்றுகொண்டு மணி அடிக்கிறார்! தான் முதல் மந்திரியாகவந்தது அரசியலை ஒழுங்காக நடத்துவதற்கு அல்லவாம்! பழமையைப் பாதுகாக்கவே வந்திருக்கிறாராம்!

> “நான் முதன் மந்திரியாக ஆகி இருந்தாலும், பழைய சங்கதியையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன்”

என்று கூறுவதன் வாயிலாக தம்முடைய பணி எது என்பதனை விளக்கியிருக்கிறார். வேதனைப்படவேண்டாம்! சற்று நிதானித்து, விவேகத்தைத் துணைக்கழைத்து வைத்துக்கொண்டு, ஆச்சாரியார் கூறிய வாசகங்களை ஆராய்ந்து பாருங்கள்—உண்மை புலப்படும்.

★

திருச்சித் தீர்மானங்கள்

—✲—

7—3—54ல் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் இங்கு தரப்படுகிறது:—

அமெரிக்கா—பாகிஸ்தான் போர்ப் படை உதவி உடன்படிக்கை

உலகின் பல பகுதிகளிலும், குறிப்பாக ஆசிய நாடுகளிலும், தனது ஆதிக்கப் பிடியை நிலைநாட்டிக்கொள்ள உதவி, உறவு, உடன்படிக்கை என்ற பெயர்களால் அமெரிக்கா வீசும் சூழ்ச்சி வலையில், இந்தியா தனது அரசியல் நுணுக்க மேம்பாட்டுத் திறமையின்மை (ராஜதந்திர சூன்யம்) காரணமாக, உதவி—உறவு—உடன்படிக்கை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்ட கடந்தகால நடவடிக்கைகள், இந்தியாவைப் பற்றிப் பொதுவாகப் பல்வேறு நாடுகளின் மனதிலும், குறிப்பாகப் பாகிஸ்தான் மனதிலும், அமெரிக்கா அணியில் இந்தியா இருக்கிறது என்ற அச்சத்தையும், திகைப்பையும் உருவாக்குவதற்குக் காரணமாய் அமைந்தது, பாகிஸ்தானை அமெரிக்காவுடன் போர்ப் படை உதவி உடன்படிக்கை செய்து கொள்ளும் நிலைக்குத் துரத்திற்று. அமெரிக்கா — பாகிஸ்தான் போர்ப் படை உதவி உடன்படிக்கை பாகிஸ்தான் சுதந்திரத்துக்கே ஊறு செய்வதோடு, ஆசிய நாடுகளிடையே கொந்தளிப்பையும் அருவருப்பையும், அமைதியின்மையையும் பெருக்குவதற்கு வழிகோலும் என்றும் கருதுவதால், திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் போர்ப்படை உடன்படிக்கையை மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கை—இந்தியா உடன்படிக்கை

இலங்கையில் வாழும் இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர், தென்னாட்டை—திராவிடத்தைச் சேர்ந்தவராவார்கள். இலங்கையில் போதுமான அளவு உரிமையின்றித் தவிப்பவர்களும் இலங்கைச் சட்டதிட்டங்களால் மிகவும் பாதிக்கப்படுபவர்களும் திராவிட மக்களேயாவார்கள். நிலைமை இவ்வாறு இருக்க, சென்னை அரசியலாரையோ அல்லது தென்னாட்டு மக்களோடு தொடர்பு கொண்ட தலைவர்களையோ கலந்து கொள்ளாமல் இலங்கைப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் இலங்கைவாழ் திராவிட மக்கள் உரிமைபற்றி ஒரு உடன்படிக்கைக்கு வந்திருப்பது, அடிப்படை ஜனநாயகப் பண்புகளைப் புறக்கணிப்பதாகும் என்பதோடு, ஏற்படுத்தப்பட்டிருக்கும் உடன்படிக்கையும் எட்டு இலட்சம் திராவிடர்களைப் பாதிப்பதாகவும் அமைந்திருப்பதால், இந்த உடன்படிக்கையை உடனே மாற்றி, உரிய தென்னாட்டுத் தலைவர்களைக் கலந்து கொண்டு, இலங்கை வாழ் திராவிடர்களின் உரிமைகள் பாதிக்கப்படாத வகையில், புதியதொரு உடன்படிக்கையை, இலங்கை அரசியலாருடன் செய்ய முன்வர வேண்டும் என்று இந்திய அரசியலாரையும், சென்னை அரசியலாரையும் இப்பொதுக்குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

கும்பமேளா நிகழ்ச்சி

ஐநூறு பேர்கள் உயிரிழப்பதற்கும், ஆயிரக்கணக்கான பேர்கள் காயங்கள் படுவதற்கும், பல்லாயிரக் கணக்கானவர்கள் காணாமற் போய்த் திக்குமுக்காடித் திரிவதற்கும் காரணமான கும்பமேளாத் திருவிழாவில், மூட நம்பிக்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் தேடுகிறவகையில், இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சியின் தலைமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கும் தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்களும், தோழர் பண்டித நேரு அவர்களும் கலந்துகொண்ட செயல்குறித்து இப்பொதுக் குழு மிக்க வருத்தங் கொள்கிறது.

மும்முனைப் போராட்ட வீரர்கள்

(அ) கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய மும்முனைப் போராட்டங்களில் பங்கு கொண்டு, ஆச்சாரியார் ஆட்சியின் அடக்குமுறைக் குண்டுகளுக்குப் பலியாகி உயிரிழந்தோருக்கு இப்பொதுக் குழு வீர வணக்கம் செலுத்திக் கொள்கிறது.

(ஆ) போராட்டங்களில் கலந்து சிறை தண்டனை ஏற்றும் குண்டுக் காயங்களைத் தாங்கியும், தடியடிபட்டும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கு இலக்காகியும், மற்றும் சொல்லொணா இன்னல்களை ஏற்றும் கழகக் கொள்கைகளினிடத்துள்ள குன்றாப் பற்றையும், உறுதியையும் வெளிப்படுத்திய ஆறாயிரவர்க்கு மேற்பட்ட தி. மு. க. உறுப்பினர்களுக்கு இப்பொதுக்குழு தனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறது.

(இ) போராட்டங்களில் உயிரிழந்தோரின் மறைவால் துடித்து நிற்கும் குடும்பத்தினருக்கு இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) துப்பாக்கிக் குண்டடிபட்டு மாண்டவர்களின் திக்கற்றக் குடும்பங்களுக்குச் சென்னை ஆட்சியாளர் உடனடியாக நஷ்ட ஈட்டுத்தொகை கொடுக்கவேண்டும் என்று ஆட்சியாளரை — இப்பொதுக் குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(உ) துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானவர்கள், குண்டடியால் உறுப்புகளிழந்தோர் ஆகியோரின் குடும்பத்திற்கு உதவுவதற்காகக் கழகத்தின் சார்பாக ஒரு நிதி திரட்டுவதென இப்பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது.

ஆட்சியாளரின் அடக்குமுறைப் போக்குக்குக் கண்டனம்

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தின் நியாயமும், நேர்மையும் நிறைந்த போராட்டங்களை, ஜனநாயக முறைப்படி மதிக்க மறுத்துத் தூத்துக்குடி, கல்லக்குடி ஆகிய இடங்களில் துப்பாக்கிக்குண்டுகளை வீசிப் பலரைப் படுகாயப்படுத்தியும் அறுவரைப் பிணமாக்கியும், சென்னைக் கல்வித் திட்ட எதிர்ப்பு அற

வழி மறியலில் தடியடிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகள் போட்டும் ஆணவமாய் நடந்து கொண்ட ஆச்சாரியார் ஆட்சியின் எதேச்சாதிகாரம் மிக்க அடக்குமுறைப் போக்கை இப்பொதுக் குழு மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) துப்பாக்கிப் பிரயோகத்தின் தவறை மறைப்பதற்காகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அடக்குமுறையை ஏவ வேண்டும் என்பதற்காகவே தொடரப்பட்டிருக்கும் தூத்துக்குடிச் சதி வழக்கு, கல்லக்குடி வழக்கு ஆகியவற்றை உடனடியாக மீட்சி பெற வேண்டும் என்று இப் பொதுக் குழு சென்னை ஆட்சியாளரை வற்புறுத்துகிறது.

நிதி சேர்ப்புக்கு நன்றி தெரிவிப்பு

பொதுச் செயலாளர் அவர்களின் வேண்டுகோளின்படி தூத்துக்குடிச் சதி வழக்கிற்காக இருபதினாயிரம் ரூபாய் நிதி திரட்டித்தந்த மாவட்டக் கழகத்தார், கிளைக்கழகத்தார், தாய்மார்கள் பொது அமைப்புகளைச் சேர்ந்தோர், பொதுமக்கள் ஆகிய எல்லோர்க்கும் இப்பொதுக்குழு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம்

(அ) புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் சிறிதளவும்பலன் தாராதது என்பதுமட்டுமல்லாமல், நாட்டின் தரத்தையும், பொருளாதார வளர்ச்சியையும், மாணவர்களின் எதிர்கால வாழ்வையும் பாழ்படுத்தக்கூடியதுமாகும் என்பதை, கழகத்தார் பலவழிகளில் சுட்டிக்காட்டியிருந்தும், அரசியல் தலைவர்கள்—கல்வி வல்லுநர்கள்—ஆசிரியர்கள்—பெற்றோர்கள்—சட்டமன்ற உறுப்பினர்கள்—பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தும், கண் துடைப்பு வேலையாக அமைந்த பருளேக்கர் குழுக்கூட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தும், புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தைக் கைவிடாமல், சென்னை அரசியலார் வீண்பிடிவாதம் செய்து வருவதை இப்பொதுக்குழுவன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) புதிய ஆரம்பக்கல்வித் திட்டத்தைச் சிற்றூர்களிலும், பேரூர்களிலும் புகுத்தி அவற்றைப் பாழ்படுத்தியதோடு, நகரங்களையும் பாழாக்கும் முறையில், அதனை, இனி நகரங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சி நிறைவேற்றப்படுமானால், திட்டம் உறுதியாகத் தோல்வியுறும் என்று எச்சரிக்கை செய்வதோடு, பெரும் அறவழி எதிர்ப்பைநேர்நிறுத்திப்பார்க்க வேண்டிய அவசியமும் ஏற்படும் என்றும், சென்னை அரசியலார்க்குத் திராவிட முன்னேற்றக்கழகம் இப்பொதுக்குழுவின் மூலம் எச்சரிக்க விரும்புகிறது.

(இ) ஆச்சாரியார் கல்வித் திட்ட ஒழிப்பு, கல்லக்குடிப் போராட்டம் ஆகியவை பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவும், தேவைப்படும்போது முற்போக்குக் கட்சிகள் எடுக்கும் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வழிவகை செய்யவும் பொதுச்செயலாளருக்கு இப்பொதுக்குழு தனியுரிமை வழங்குகிறது.

தமிழ்ப் பகுதிகள் இணைப்பு

(அ) தமிழகத்தை ஒட்டித் தொடர்ந்தாற்போல்உள்ள சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகள், மொழி வழி மாநில அடிப்படையில், தமிழகத்தோடுஇணைக்கப்படவேண்டும் என்ற கருத்து, நீதிக்கு ஏற்ற முறையாவதோடு, சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுத் தீர்மானத்தாலும் வலியுறுத்தப்பட்டிருப்பதாகும். சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளை இப்பொழுது ஆந்திர மாநிலத்தோடு சேர்த்துக் கணக்கிட்டிருப்பது தமிழக மொழிவழி உரிமைக்கு இழைத்த அநீதியாகும். இந்த அநீதியைத் துடைப்பதற்கான முயற்சிகளிலும், கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டுக் கழகத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், தங்களாலான அளவுபாடுபட்ட—பாடுபட்டு வரும் கழகத்தோழர்களைபாராட்டுவதோடு, இணைப்பு முயற்சியை இன்னும் வலிவாக்கவும், அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுக்கவும் தோழர் என். வி. நடராசன் அவர்களைத் தலைவராகவும், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, கே. எம் கண்ணபிரான் (மற்றும் இருவரை நியமித்துக் கொள்ள அதிகாரம்) ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு ஒன்றை அமைப்பதென இப்பொதுக்குழு முடிவுசெய்கிறது.

(ஆ) தமிழகத்தின் தெற்குப் பகுதியில், தமிழகத்தோடு ஒட்டித், திருவிதாங்கூர்—கொச்சி மாநிலத்தில் இருக்கும் நாஞ்சில் பகுதியும், பிற தமிழ்ப் பகுதிகளும் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்ற கருத்தை, நாஞ்சில் மாவட்ட முதல் தி. மு. கழக மாநாட்டிலும், திராவிட முன்னேற்றக் கழகச் சென்னை மாநில மாநாடு தீர்மானத்தின் மூலமும் வலியுறுத்திக் கூறியிருப்பதாலும், திருவிதாங்கூர்—கொச்சித் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற குறிக்கோளை முன்னிறுத்தி அண்மையில் அங்குநடந்த தேர்தலில் போட்டியிட்ட தோழர்கள் பாராட்டத் தகுந்த வகையில் வெற்றி பெற்றிருப்பது, இணைப்புக் கொள்கையின் அவசியத்தைத் தெள்ளத் தெளியக் காட்டுவதாலும், இணைப்பு முயற்சியை வெற்றிகரமாக்கவேண்டும் என்று இந்திய ஆட்சியாளரையும், சென்னை ஆட்சியாளரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வதோடு, இணைப்பு முயற்சியில் ஈடுபடவும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் குழு ஒன்றை அமைப்பதற்கு பொதுச் செயலாளருக்கு இப் பொதுக் குழு அனுமதி அளிக்கிறது.

(இ) இந்த இணைப்பு முயற்சிக் குழுக்கள் அவ்வப்போது கழகப் பொதுச்செயலாளரைக் கலந்து கொண்டு, திட்டங்கள் தீட்டவும், நடவடிக்கைகள் எடுக்கவும் ஆன செயல்களில் ஈடுபட வேண்டும் என்றும் இப் பொதுக்குழு முடிவு செய்கிறது.

வட ஆற்காடு மாவட்ட உழவர் கிளர்ச்சி

வட ஆற்காடு மாவட்டக் களம்பூரில் நடக்கும் உழவர் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளோர் மீது வழக்குகள் தொடர்ந்தும் வீடுகளில் புகுந்து பெண்களைத் துன்புறுத்தியும்—மற்றும் பலாத்கார செயல்களில் ஈடுபட்டும் இழி செயல்கள் புரிவோர்க்கு ஊக்கங்கொடுத்தும் வரும் ஆட்சியாளரின் அடாத போக்கை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

*

"இதுதான் எங்கள் உண்மை வடிவம்"

மதத்தின் பெயரால் மாபெரும் பாதகங்கள் விளைகின்றன; இது அடாதது— அருவருக்கத்தக்கது— இத்தகைய மதம் மண்ணோடு மண்ணாக மாண்டொழிந்து போகட்டும் என்று நாம் கூறும்பொழுதெல்லாம், 'மதத்தின் வைரிகள்' என்ற பட்டத்தை நமக்குச் சூட்டுவதும்; கடவுளின் பெயரால கயமைத்தனங்கள் நடைபெறுவது, நல்லோர் கண்டு நகைக்கத் தக்கவை, நானிலத்தோர் நம்மை நிந்திக்கும் செயலினைச் செய்வதாகும் என்று நாம் செப்பிய பொழுதெல்லாம், 'கடவுளை நிந்திக்கும் கயவர்கள்' என்ற கடுஞ்சொல்லை நம்மீது வீசுவதும், சந்நியாசிகள், சாதுக்கள், மடாதிபதிகள் என்ற உருவிலே பல நாசகாலர்கள்—நச்சு நினைப்பினர்—தங்கள் உண்மை உருவினை மறைத்துப் போலிவேடம் போட்டு, ஏமாந்தோரை ஏய்த்து ஏற்றங்கொண்டு வாழ்வது, எள்ளி நகையாடத்தக்க கள்ளத்தனங்கள் என்று நாம் எடுத்துக் கூறும்பொழுதெல்லாம், 'சத் புருஷர்களைச் சாடும் சண்டாளர்கள்' என்று நம் மீது சீறிப் பாய்வதுமாக உள்ள 'சிலர்' களின் சிந்தனைக்கு, எத்தனையோ எடுத்துக் காட்டுகளையும், நாட்டு நடப்புகளையும் நாம் காட்டி வந்திருக்கிறோம். இருந்தபோதிலும் 'இவைகளெல்லாம் இந்த நாட்டின் கலாச்சாரங்கள்' என்று இரும்புப் பிடியாக அவைகளைத் தங்களின் வாழ்வுக்கு இன்றியமையாதனவையாகப் பிடித்துக்கொண்டு, ஏமாந்தோரின் மடியைத் தடவி தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ளும் வக்கிர புத்திபடைத்த அக்கிரமக்காரர்கள் தங்கள் அட்டகாசத்தை அணுவளவேனும் இந்நாள்வரை குறைத்துக்கொள்ளாத காரணத்தால், இன்னல்கள் பல இந்த நாட்டைச் சூறுவளியென சூழ்ந்தடித்துக்கொண்டுள்ளன.

இப்படிப்பட்ட இழிதகை காரியங்கள் நடைபெறுவதற்கு, இந்த நாட்டு அரசுபீடமேறியோரும் தங்களான உதவிகளைத் தந்தபடி, 'உன் மதக் காரியங்கள்' நடைபெறும் வண்ணம் செய்துகொண்டு வருகின்றனர்.

மடமையை மாய்த்தொழிக்கும் மார்க்கத்தினைக் கொள்ளாவிடினும், அது ஓங்கி வளருவதற்கு உதவி செய்யாத நாடாள்வோர் இருந்தால், நானிலத்தோர் நகைக்கத் தக்க நிகழ்ச்சி அண்மையிலே அலகாபாத்திலே நடைபெற்றிருக்குமா?

பல்லாயிரக்கணக்கானோர் பதை பதைத்து அல்லலுறவும், ஆயிரக்கணக்கானோர் தங்கள் ஆவியினைத் துறக்கவுமான அடாத காரியம் நடைபெற்றது ஏன்?

கும்பமேளாவில் கலந்துகொண்டு, நாகசாதுக்களைத் தரிசனம்செய்து, நதியில் மூழ்குப்போட்டால், 'செய்த பாபம் செத்தொழியும்' 'போகிற கதிக்கு நல்லது' 'புண்ணியம் வந்து சேரும்' என்ற கானல் நீரான கொள்கையைக் கருத்திலே மக்கள் வளரவிட்டுக் கொண்டிருந்ததாலும் 'கும்பமேளாவில் வந்து கூடுங்கள்'—என்பன பேன்ற சர்க்காரின் அறிக்கைகளும் அல்லவா, அப்படிப்பட்ட கோர நிகழ்ச்சிக்கு வித்தாக அமைந்தது!.

மாசான மதநம்பிக்கைமக்கள்மனதிலே புகுந்துகொண்டிருப்பதும், அந்த நம்பிக்கைக்கு அரசாங்கத்தார் அருந்துணை புரிவதும், அதனால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பதும் போன்ற நிகழ்ச்சி, இந்த இருபதாம் நூற்றாண்டில், இந்திய உபகண்டத்திலன்றி வேறெங்கேனும் காணக்கூடாத காட்சி.

இந்த அடாத நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு, அரசாங்கத்தார் ஓர் விசாரணைக் குழு ஒன்றை ஏற்படுத்தினர். நிகழ்ச்சி நேரிட்டதற்கு வருத்தம் தெரிவிக்கவோ, அடுத்த கும்பமேளாவை எப்படி நடத்தலாம்என்று தீர்மானிக்கவோ, அந்நிய நாட்டார் பரிகசிப்பரே — அதற்கொரு திரையாக அமையட்டும் என்றோ—அரசாங்கம் விசாரணைக் குழுவை ஏற்படுத்தியது.

அந்த விசாரணைக் குழு முன்பாக மார்ச் 6ல், இராணுவ சர்விஸ் படை அதிகாரி எஸ். பி. விஷ்வென் என்பார், விசனிக்கத்தக்கதும் - விபரீதமானதுமானதோர் தகவலை வெளியிட்டுள்ளார்:

"இரண்டு ஊர்வலங்கள், ஒன்றுக்கொன்று எதிராக வந்தன. ஊர்வலங்களின் ஒன்றின் முன்பாகச் சிறிது இடைவெளி இருந்தது. அங்கு 3 அல்லது 4— வயதுள்ள குழந்தையொன்று வந்து சேர்ந்தது. உடனே, நாகசாதுக்களில் ஒருவர் அக்குழந்தையின் காலைப்பிடித்து, தலைமீது சுற்றி கூட்டத்தில் வீசி எறிந்தார். இந்தச் சாதுவுக்கு உதவியாக இன்னொரு நாகசாது வந்து சேர்ந்தார். அவர், தம் கையிலிருந்த ஒருவருடைய வயிற்றில் குத்தினார்"

ஜன நெரிசலின் காரணமாக ஊர்வலங்களின் இடையே அகப்பட்ட குழந்தையை, தலை மீது சுற்றி கூட்டத்தில் வீசி எறிந்தார் நாகசாது. இந்நிலை காரணமாக அங்கு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

கேட்கக் கொடூரமான இச்செய்கையை சாது ஒருவர் செய்திருக்கிறார்.

எந்தச் சாதுக்களின் பாததூளியைத் தொட்டு புண்ணியம் தேடிக் கொள்ளவேண்டும் என்று மக்கள் கூட்டம் சென்றதோ, அந்தச்சாதுக்களில் ஒருவர் இந்தச் சண்டாளத் தொழிலைச் செய்திருக்கிறார். பஞ்சமா பாதகங்களைப் புரியும் வஞ்சகனும் செய்ய அஞ்சும் அக்கிரமக்காரியத்தை, சாது என்ற உருவிலே இருந்த சண்டாளன் ஒருவன் செய்திருக்கிறான். கொல்லும் புலியும் குழந்தைகளைக் கண்டால் விலகிச் செல்லும் என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் — அந்த விலங்கினும் கொடிய உள்ளம் படைத்த உலுத்தன்ஒருவன் பச்சிளங் குழந்தையை பதைக்கப் பதைக்க வீசி எறிந்திருக்கிறான்.

இப்படியானதோர் கொடுஞ்செயல் புரிந்ததாகப் புராணத்தில்

மே மாதம் இரண்டாவது வாரத்தில்

மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடு

மதுரையில் நடைபெறும்.

எஸ். முத்து
மாநாட்டுச் செயலாளர்

படித்திருக்கிறோம். பஞ்சத்தினால் மக்கள் பரதவித்துக்கொண்டிருந்தார்கள். பக்தர் ஒருவர் பரமனுக்கென நெல்லைக் குவித்து வைத்திருந்தார். பசித்த மக்களோ, குவித்திருந்த நெல்லை எடுத்துக்கொண்டனர்—பஞ்சம் நீங்கிய பிறகு பக்தருக்குக் கொடுத்து விடலாம் என்று. பக்தரோ, பரமனின் பெயரால், அன்பின் பெயரால், கருணையின் பெயரால், அந்த மக்களை பதைக்கப் பதைக்க, வாளால் வெட்டித் தள்ளினார். ஆத்திரம் அடங்காத நிலையில், அவர் ஓர் பச்சிளங் குழந்தையைக் கண்டார். அச்சிசு தவறு இழைக்காதிருந்தபோதிலும், தவறிழைத்த தாயின் பாலை உண்டிருக்குமன்றோ—என எண்ணி, அக்குழவியை, மேலே வீசி, கத்தியைப் பிடித்தார். குழவி இரு துண்டாகச் சிதறி மாண்டது என்ற புராணக் கதையையும், அக்காரியம் செய்த கோட்புலிக்கு—நாயனார் என்ற பட்டத்தையும் அளித்தனர் என்று. புராணத்தில் படித்திருக்கிறோம்.

ஆனால், அத்தகைய காரியத்தை கும்பமேளா நிகழ்ச்சியில், நாகசாது செய்து காட்டிவிட்டார்—புராணம் பொய்யல்ல என்று ருசுப்படுத்திக் காட்டிவிட்டார்.

மதத்தின் பற்றினால்—இகத்தில் புண ்ணியத்தைத் தேடி, பரலோகத்தில் நல்லதோர் இடத்தைப் பெறலாம் என்று எண்ணிய மாதாவின் மாணிக்கத்தை — சாது உருவிலேசென்ற பேயன் ஒருவன், கால்களைப் பிடித்து, தலைமீது வீசி எறிந்திருக்கிறான்.

சாது என்ற பெயருக்கும் தனக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள மகத்தான வித்தியாசம் போன்றது என்பதை எல்லோருக்கும் எடுத்துக்காட்டிவிட்டான்—தன் செய்கை மூலம்.

கண்மூடி வழக்கத்தில் சுற்றியலைபவர்களே—நான் செய்யும் இந்தக் காரியத்தால், கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போகட்டும்—என்று கூறாமற் கூறிவிட்டான், அந்த நாகசாது.

எங்கள் பாததூளி பட்டால், உங்கள் பாபமெல்லாம் பறந்தோடிப் போகும் என்ற மாசுபடைத்த மனப்பான்மை கொண்டு, கும்பமேளாவுக்குக் கூடியிருக்கும் மக்களே! நாங்கள், விருப்பு வெறுப்பற்ற வித்தகர்கள் என்று வீண்பிரமை கொண்டு—மாசு மருவற்ற மகந்துக்கள் என்று தவறான எண்ணங்கொண்டு வந்திருப்பதைக் காண வருத்தங் கொள்கிறேன் நான் செய்யும் இக்காரியத்தைக் கொண்டேனும், நாங்கள் யார் என்பதை அறிந்துகொள்ளுங்கள் என, தன் தகாத செய்கையின் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டான்—நாக சாது!

அவர்மட்டும்தான் அப்படிப் பட்டவர் என்று எண்ணிவிடாதீர்கள்; நாங்கள் எல்லோருமே விலங்கு குணம் கொண்ட வேடதாரிகள் தான் என்பதை, ஒருவரை தன் கையிலிருந்த ஆயுதத்தால் வயிற்றில் குத்தியிருக்கிறான்—மற்றொரு நாக சாது.

இப்படிப்பட்ட சாதுக்களுக்குத் தான் இலட்சக்கணக்கான வருவாயைத் தரத்தக்க நிலங்களையும், பொன் பொருள்களையும் கொட்டித் தந்து, காத்து வருகிறார்கள்—இந்த நாட்டு மக்கள்.

இப்படிப்பட்டவர்களை இரட்சித்துக் காப்பதுதான் இந்த நாட்டுப் பண்பாடுகளில் தலைசிறந்தது என்று இந்த நாட்டு அரசியல் பீடமேறியோரும், அங்கிங்கெனாதபடி எங்கும் பறைசாற்றி வருகின்றனர்.

இந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்ட விஷ்வென், பாலத்தருகில் போய் நின்றாராம். அங்கு ஒரு போலீஸ்காரர், இளைஞன் ஒருவனைத் தாக்கிக் கொண்டிருந்தாராம். எனவே, மக்கள் பாலத்தை நோக்கி விரையவே, பாலத்தின்ஒருபகுதிஇடிந்து பலர் ஆற்றில் விழுந்தனராம். இவைகளையெல்லாம் கண்ட அவர், ஆற்றில் குளித்து அதனால் ஏற்படும் புண்ணியத்தைச்சம்பாதிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, வீடு திரும்பினாராம்.

மாற்றாரிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்று மார்தட்டிப் பேசும் விடுதலை வீரர்கள், மதத்தின் கொடும் பிடியினின்று விடுதலை பெறவில்லை — மதோன்மத்தர்களின் மார்க்கத் துறையினின்றும் விடுதலை பெறவில்லை — விடுதலை பெறும் மார்க்கத்தைத் தேடவில்லை —தேடாததுமட்டுமல்ல அப்பணியினை மேற்கொண்டுள்ள நம்மைப் பார்த்து பரிகசிக்கின்றனர். உலகமோ, கும்பமேளா போன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு, இவர்களைப் பார்த்துப் பரிகசிக்கிறது.

வஞ்சகத்தை தங்கள் முதலாக வைத்து, வாழ்க்கையை வளையாது நெளியாது ஓட்டிச் செல்லுவோரின் மாயவலையினின்று விடுபடும் நாளே, இந்த நாட்டின் விடுதலை நாள்—வெற்றி நாள்!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.